www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 6 ஆம் வகுப்பு

முழு ஆண்டு கையேடு

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின் படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று பருவங்களுக்குரிய அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு 2022, இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு 2019, மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு (SA) – 2022 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000
96001 75757 / 78718 02000 / 98409 26027

enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides

www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

***2023-24* புதிய பதிப்பு**

**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-93-5330-569-7**

**குறியீட்டு எண் : FY-6-T**

*எழுதி வழங்கியவர்*

**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

## பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 6ஆம் வகுப்பு – தமிழ் உரைநூல் – முழு ஆண்டு பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 6ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

**Our Guides for Std VI & VII**

**TERMWISE GUIDES (for each Term) &**
**FULL YEAR GUIDES for 3 Terms together**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's 5-in-1 with all 5 Subjects in one guide (EM & TM)

**Our Guides for Std VIII to X**

**GUIDES**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics Guide (EM & TM)
- Sura's Science Guide (EM & TM)
- Sura's Social Science Guide (EM & TM)

**தலைமை அலுவலகம்**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**

1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phones :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**e-mail :** orders@surabooks.com
**website :** www.surabooks.com

For Orders Contact

**80562 94222**
**81242 01000**
**81243 01000**
**96001 75757**
**78718 02000**
**98409 26027**

28/11/2022



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# முதல் பருவம்

## பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| மனப்பாடச் செய்யுள் (மூன்று பருவம்) | | | | 1-2 |
| 1. | மொழி **தமிழ்த்தேன்** | கவிதைப் பேழை | இன்பத்தமிழ் ✶ | 3-32 |
| | | | தமிழ்க்கும்மி | |
| | | உரைநடை உலகம் | வளர்தமிழ் | |
| | | விரிவானம் | கனவு பலித்தது | |
| | | கற்கண்டு | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | |
| 2. | இயற்கை **இயற்கை இன்பம்** | கவிதைப் பேழை | சிலப்பதிகாரம்✶ | 33-63 |
| | | | காணி நிலம் ✶ | |
| | | உரைநடை உலகம் | சிறகின் ஓசை | |
| | | விரிவானம் | கிழவனும் கடலும் | |
| | | கற்கண்டு | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | |
| 3. | அறிவியல், தொழில்நுட்பம் **எந்திர உலகம்** | கவிதைப் பேழை | அறிவியல் ஆத்திசூடி | 64-90 |
| | | | அறிவியலால் ஆள்வோம் | |
| | | உரைநடை உலகம் | கணியனின் நண்பன் | |
| | | விரிவானம் | ஒளி பிறந்தது | |
| | | கற்கண்டு | மொழி முதல், இறுதி எழுத்துகள் | |
| முதல் பருவ தொகுத்தறி தேர்வு 2022 வினாத்தாள் விடைகளுடன் | | | | 91-94 |


(✶) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# பொருளடக்கம்

## இரண்டாம் பருவம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | கல்வி **கண்ணெனத் தகும்** | கவிதைப் பேழை | மூதுரை ✶ | 95-117 |
| | | | துன்பம் வெல்லும் கல்வி | |
| | | உரைநடை உலகம் | கல்விக்கண் திறந்தவர் | |
| | | விரிவானம் | நூலகம் நோக்கி... | |
| | | கற்கண்டு | இன எழுத்துகள் | |
| 2. | நாகரிகம், பண்பாடு **பாடறிந்து ஒழுகுதல்** | கவிதைப் பேழை | ஆசாரக்கோவை | 118-147 |
| | | | கண்மணியே கண்ணுறங்கு | |
| | | உரைநடை உலகம் | தமிழர் பெருவிழா | |
| | | விரிவானம் | மனம் கவரும் மாமல்லபுரம் | |
| | | கற்கண்டு | மயங்கொலிகள் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | |
| 3. | தொழில், வணிகம் **கூடித் தொழில் செய்** | கவிதைப் பேழை | நானிலம் படைத்தவன் | 148-172 |
| | | | கடலோடு விளையாடு ✶ | |
| | | உரைநடை உலகம் | வளரும் வணிகம் | |
| | | விரிவானம் | உழைப்பே மூலதனம் | |
| | | கற்கண்டு | சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் | |
| | இரண்டாம் பருவ தொகுத்தறி தேர்வு- 2019-20 வினாத்தாள் விடைகளுடன் | | | 173-176 |


(✶) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# பொருளடக்கம்

## மூன்றாம் பருவம்



| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **புதுமைகள் செய்யும் தேசமிது** | கவிதைப் பேழை | பாரதம் அன்றைய நாற்றங்கால் ✶ | 177-199 |
| | | உரைநடை உலகம் | தமிழ்நாட்டில் காந்தி | |
| | | விரிவானம் | வேலுநாச்சியார் | |
| | | கற்கண்டு | நால்வகைச் சொற்கள் | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை **எல்லாரும் இன்புற** | கவிதைப் பேழை | பராபரக் கண்ணி ✶ | 200-226 |
| | | | நீங்கள் நல்லவர் | |
| | | உரைநடை உலகம் | பசிப்பிணி போக்கிய பாவை | |
| | | விரிவானம் | பாதம் | |
| | | கற்கண்டு | பெயர்ச்சொல் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✶ | |
| 3. | மனிதம், ஆளுமை **இன்னுயிர் காப்போம்** | கவிதைப் பேழை | ஆசிய ஜோதி | 227-246 |
| | | உரைநடை உலகம் | மனிதநேயம் | |
| | | விரிவானம் | முடிவில் ஒரு தொடக்கம் | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு மே 2022 வினாத்தாள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. | | | | 247-250 |



(✶) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : Padi | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : Asiad Colony | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **13240200032412** | Our A/c No. : **50200031530945** |
| Bank Name : **FEDERAL BANK** | Bank Name : **HDFC BANK** |
| Bank Branch : Anna Nagar | Bank Branch : Cenotaph Road, Teynampet |
| IFSC : FDRL0001324 | IFSC : HDFC0001216 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **446205000010** |
| Bank Name | : **ICICI BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : ICIC0004462 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

**For Google Pay :** **98409 26027**

**For PhonePe :** **98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# முதல் பருவம்

## மனப்பாடச் செய்யுள்

இயல்–1

### இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

– பாரதிதாசன்

இயல்–2

### சிலப்பதிகாரம்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்.

– இளங்கோவடிகள்

### காணி நிலம்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும் – அங்குத்

தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்

காணி நிலத்திடையே – ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்குக்

கேணி அருகினிலே – தென்னைமரம்
கீற்றும் இளநீரும்

பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும்.

– பாரதியார்

### திருக்குறள்

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

7. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. ※

– திருவள்ளுவர்

★ ★ ★

# இரண்டாம் பருவம்

### மூதுரை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் ※
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

– ஔவையார்



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## திருக்குறள்

1. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து ※
நோக்கக் குழையும் விருந்து.

2. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

3. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்.

- திருவள்ளுவர்

## கடலோடு விளையாடு

விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும்அலை நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை - ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா
விண்ணின்இடி காணும்கூத்து - ஜலசா

பாயும்புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல் போர்வை - ஜலசா
காயும்கதிர்ச் சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும்வீடு - ஜலசா
மின்னல்வரி அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள் - ஜலசா
முழுநிலவே கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கும்நீச்சல் யோகம் - ஜலசா
தொழும்தலைவன் பெருவானம் - ஜலசா
துணிவோடு தொழில்செய்வோம் - ஜலசா.

# மூன்றாம் பருவம்

## பாரதம் அன்றைய நாற்றங்கால்

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள்பசிதீர

அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

- தாராபாரதி

## திருக்குறள்

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

2. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

3. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

- திருவள்ளுவர்

## பராபரக் கண்ணி

1. தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

2. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!

- தாயுமானவர்

★ ★ ★



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

# முதல் பருவம்

# இயல் 1 மொழி - தமிழ்த்தேன்

கவிதைப்பேழை

## இன்பத்தமிழ்

### ஆசிரியர் குறிப்பு :



| | |
|---|---|
| பெயர் | : பாரதிதாசன் |
| இயற்பெயர் | : சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : புதுச்சேரி |
| பெற்றோர் | : கனகசபை - இலக்குமி அம்மையார் |
| பணி | : தமிழாசிரியர் |
| சிறப்புப்பெயர் | : பாவேந்தர், புரட்சிக்கவிஞர் |
| காலம் | : 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

### நூற் குறிப்பு

இப்பாடல் "பாரதிதாசன் கவிதைகள்" தொகுப்பில் "தமிழ்" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

### பாடல்

தமிழுக்கும் அமுதென்றுபேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!

– பாரதிதாசன்

### சொல்லும் பொருளும்

1. நிருமித்த – உருவாக்கிய
2. விளைவு – வளர்ச்சி
3. சமூகம் – மக்கள் குழு
4. அசதி – சோர்வு



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பொருளுரை

தமிழுக்கு அமுது என்று பெயர். இன்பம் தரும் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது. தமிழுக்கு நிலவு என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.தமிழுக்கு மணம் என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது. தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

## விளக்கவுரை

தமிழ், அமுதம் எவ்வாறு இனிமையாக இருக்குமோ அதைப்போல இனிமையான மொழியாக இருப்பதால் தமிழை அமுதம் என்கிறார். மேலும் தமிழை மனித உயிருக்கு நிகராக ஒப்புமைப்படுத்துகின்றார். சமூகம் (சமுதாயம்) சிறப்புடன் வளர்வதற்குத் தமிழ்மொழி நீராகப் பயன்படுகிறது. தமிழ்மொழி நறுமணம் உடையது என்றும் கூறுகிறார். இன்பத்தமிழானது மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கெனவே உருவாக்கப்பட்ட ஊராகும்.

மனிதர்கள் பொலிவுடனும் இளமையுடனும் இருப்பதற்குப் பால் எப்படிப் பயன்படுகிறதோ! அதனைப் போன்று வளமும் சுவையும் நிறைந்தது தமிழ்மொழி. இந்தத்தமிழ் சிறந்த புகழ்மிக்க தமிழ்ப்புலவர்களின் புலமையை அறிவிக்கின்ற கூர்மையான வேலாகும். தமிழ்மொழி எங்கள் உயர்வுக்கு வானமாகும். தமிழ்மொழி எங்கள் அறிவுக்குத் தோள்கொடுக்கும். தமிழ்மொழி எங்கள் கவிதையின் கவித்துவத்திற்கு வாளாகும்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஏற்றத் தாழ்வற்ற ................ அமைய வேண்டும்.**

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு [விடை: அ) சமூகம்]

**2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ................. ஆக இருக்கும்.**

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி [விடை: ஈ) அசதி]

**3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) நிலயென்று ஆ) நிலவென்று
இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று [விடை: ஆ) நிலவென்று]

**4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்
இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள் [விடை: ஆ) தமிழெங்கள்]

**5. 'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று [விடை: ஆ) அமுது + என்று]

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0



6. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்

இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர் [விடை: அ) செம்மை + பயிர்]

## இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) விளைவுக்கு | - | பால் |
| ஆ) அறிவுக்கு | - | வேல் |
| இ) இளமைக்கு | - | நீர் |
| ஈ) புலவர்க்கு | - | தோள் |

விடை:

| | | |
|---|---|---|
| அ) விளைவுக்கு | - | நீர் |
| ஆ) அறிவுக்கு | - | தோள் |
| இ) இளமைக்கு | - | பால் |
| ஈ) புலவர்க்கு | - | வேல் |

## ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக

(எ.கா.) பேர் - நேர்

விடை :

| | | | |
|---|---|---|---|
| பேர் | - நேர் | அமுதென்று | - நிலவென்று |
| பேர் | - நீர் | உயிருக்கு | - விளைவுக்கு |
| பேர் | - ஊர் | இளமைக்கு | - புலவர்க்கு |
| பால் | - வேல் | தமிழுக்கு | - வாழ்வுக்கு |
| வான் | - தேன் | உயர்வுக்கு | - அசதிக்கு |
| தோள் | - வாள் | அறிவுக்கு | - கவிதைக்கு |

## குறுவினா

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

அமுதம், நிலவு, மணம்.

2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

தேன், தங்கம், கரும்பு, சந்தனம், அமுதசுரபி, நவமணிகள் போன்றவற்றோடு தமிழை ஒப்பிடுவேன்.

## சிறுவினா

1. இன்பத் தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

(i) நீரின்றி வேளாண்தொழில் (விளைச்சல்) நிகழாது.

(ii) நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் போன்றது.

(iii) சமூக வளர்ச்சிக்கு தமிழ்மொழி நீராகப் பயன்படுகிறது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**சிந்தனை வினா**

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

(i) வேல் கூர்மையான ஆயுதம் அதைப்போல தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள், பாடல்கள், கவிதைகள் கூர்மையான கருத்துகளைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிறது.

(ii) ஆகவே தமிழ், வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அதேபோல் கத்தியின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது என்ற பழமொழியும் இதனையே விளக்கும்.

## கற்பவை கற்றபின்

**1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.**

பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் மாணவர்களை இனிமையாகப் பாடச் செய்தல்.

**2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது ஏன் என்பது குறித்து கலந்துரையாடுதல்.

**மாணவன் 1** : வணக்கம்! கவிஞர்கள் தமிழை அமுது, நிலவு, மணம் என்று அழைக்கிறார்கள். அதைப் பற்றி உனக்குத் தெரியுமா?

**மாணவன் 2** : தெரியும். அமுதம் என்பது வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவுப் பொருள் ஆகும். அது மிகவும் சுவை உடையது என்றும் அதனை உண்பதினால் தேவர்கள் சாகா வரம் பெற்றுள்ளார்கள் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. நல்ல சுவையுள்ள உணவை நாம் உண்ணும்போது தேவாமிர்தமாக இனிக்கிறது என்றும் நாம் கூறுவோம். அதைப்போல் கவிஞர்களும் தமிழ் இனிமையானது என்ற பொருளிலும், இறவாநிலையில் உள்ளது என்ற பொருளிலும் தமிழை அமுது எனக் கூறுகிறார்கள்.

**மாணவன் 3** : ஆமாம், ஆமாம் அதேபோல்தான் நிலவு என்று அழைப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. நிலவானது குளிர்ச்சி பொருந்தியது. அதுமட்டுமின்றி உலகின் இருளைப் போக்கி வெளிச்சத்தைத் தருகிறது. தமிழ் தண்மையானது(குளிர்ச்சி) என்பதாலும் மக்களின் அறியாமை என்ற இருளைப் போக்கி ஒளியைத் தருவதாலும் தமிழை நிலவு என்று அழைக்கிறார்கள்.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். மணம் என்று கூறுவதற்கும் ஒரு காரணம் உண்டு. அது என்னவெனில் பூக்களின் மணம், காற்றில் கலந்து எல்லாவிடங்களிலும் பரவுகிறது. அதேபோல் நம் தமிழ்மொழியும் மாநிலம் கடந்து, நாடு கடந்து ஏன் உலகமெங்கும் தன் நறுமணத்தைப் பரப்பியுள்ளது. எனவேதான் தமிழை மணம் என்ற பெயரிட்டு அழைத்துள்ளனர்.

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0


**3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

மாணவர்கள் தமிழுக்குச் சூட்டப்படும் பெயர்களை அறிந்து எழுதுதல்.

தேன்தமிழ், செந்தமிழ், இனிமைத் தமிழ், இளமைத் தமிழ், முத்தமிழ்...

**4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.**

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடச் செய்தல்.

**தென்றலுக்கு நன்றி!**

*கமுகொடு நெடிய தென்னை*
*கமழ்கின்ற சந்தனங்கள்*
*சமைக்கின்ற பொதிகை அன்னை*
*உனைத் தந்தாள்; தமிழைத் தந்தாள்!*
*தமிழ் எனக் ககத்தும், தக்க*
*தென்றல் நீ புறத்தும் இன்பம்*
*அமைவுறச் செய்வதை நான்*
*கனவிலும் மறவேன் அன்றோ?*

– **பாரதிதாசன்**

## கூடுதல் வினாக்கள்

**பொருள் தருக**

| | | |
|---|---|---|
| அமுது | – | அமிர்தம் |
| சமூகம் | – | மக்கள் தொகுதி |
| அசதி | – | சோர்வு, களைப்பு |
| நேர் | – | சமம் |
| வயிரம் | – | (நவரத்தினங்களுள் ஒன்று) உறுதியும் ஒளியும் மிகுந்த மணி. |
| நிருமித்த | – | உருவாக்கிய |
| விளைவு | – | வளர்ச்சி |

**பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| இன்பத்தமிழ் | = | இன்பம் + தமிழ் |
| அமுதென்று | = | அமுது + என்று |
| நிலவென்று | = | நிலவு + என்று |
| மணமென்று | = | மணம் + என்று |

**எதிர்ச்சொல் தருக**

| | | |
|---|---|---|
| அமுது | × | நஞ்சு |
| இன்பம் | × | துன்பம் |
| நீர் | × | நெருப்பு |
| இளமை | × | முதுமை |
| புகழ் | × | இகழ் |
| உயர்வு | × | தாழ்வு |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Surabooks.com www.Padasalai.Net

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. பாரதிதாசனின் இயற்பெயர் ................. [விடை: கனகசுப்புரத்தினம்]
2. தமிழ், இளமைக்குக் காரணமான ................. போன்றது. [விடை: பால்]
3. தமிழுக்கு .............., .............., .............., என்று பெயர். [விடை: அமுது, நிலவு, வானம்]
4. தமிழ், உயர்விற்கு எல்லையாகிய ................. போன்றது. [விடை: வானம்]
5. தமிழ், அறிவுக்குத் துணை கொடுக்கும் ................. போன்றது. [விடை: தோள்]
6. இன்பத்தமிழ் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான ................. போன்றது. [விடை: நீர்]
7. புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவி ........... [விடை: தமிழ்]

## குறுவினா

1. **பாரதிதாசனின் இயற்பெயர் யாது?**

   பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்

2. **பாரதிதாசனின் பெற்றோர் யாவர்?**

   தந்தையார் – கனகசபை

   தாயார் – இலக்குமி.

3. **பாரதிதாசனார் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படக் காரணம் யாது?**

   பாரதிதாசனார் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு ஆகியவை குறித்த புரட்சிகரமான கருத்துகளைப் பாடியுள்ளமையால் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படுகிறார்.

4. **பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

   **பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் :** புரட்சிக்கவி, பாவேந்தர்.

5. **பாரதிதாசன் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் |
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : | புதுச்சேரி |
| பெற்றோர் | : | கனகசபை – இலக்குமி அம்மையார் |
| பணி | : | தமிழாசிரியர் |
| சிறப்புப்பெயர் | : | பாவேந்தர், புரட்சிக்கவி |
| காலம் | : | 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

☆☆☆

## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

மாணவர்களைக் கால மாற்றத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழி தமிழ்மொழி பற்றிப் பேசச் செய்தல்.

**மாணவன் 1** : வணக்கம். நம் தமிழ்மொழியானது காலத்திற்கேற்றாற்போல் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' எனப் புகழப்படும் தமிழ் உலகில் பல இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே தான் உள்ளன. தமிழ் மொழியில் உள்ள இலக்கிய இலக்கண வளங்களால்தான் அழியா நிலை பெற்றுள்ளது எனலாம்.

**மாணவன் 2** : அதுமட்டுமா? ஒலியாகத் திரிந்து சித்திரமாய் மாறி பல மொழிகளுடன் இணைந்து உருக்கள் பலப்பல எடுத்தும் காலம் பல கடந்து கல்வெட்டுகளில் செதுக்கப்பட்டும் ஓலைச்சுவடிகளில் வரையப்பட்டும் தற்போது காகிதங்களில் மிளிர்ந்து கொண்டும் உள்ளது நம்தாய் மொழியாம் தமிழ். இது காலச்சூழல் மாற்றங்களுக்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் சிறப்பு பெற்றது.

**மாணவன் 1** : பிறமொழிகள் தங்கள் தொன்மை மாறாமலும் அவை இருந்த இடத்திலிருந்து இறங்கி வராமலும் காலத்திற்கேற்ப மாற்றம் கொள்ளாமலும் இருந்ததால் வழக்கொழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழானது கற்றவர் கல்லாதவர் என அனைவருடைய நாவிலும் நடனமாடுகிறது. இதனால் அழியாப் புகழுடன் விளங்குகிறது. கன்னித்தமிழாய் இருப்பதோடல்லாமல் மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் விளங்குகிறது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். தமிழ் மேடைத் தமிழ், எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என்று வெவ்வேறு உருவத்தில் தன்னை வளைத்துக் கொடுக்கும் தன்மையால்தான் இன்றும் வளர்ந்து கொண்டே வருகிறது.

**மாணவன் 1** : இன்றைய நடைமுறைக்கு ஏற்ப ஊடகங்களில் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்மொழியானது தனியாக வளர்க்கப்படவில்லை. பக்தி இலக்கியக் காலத்தில் பக்திப் பாடல்கள், சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசபக்திப் பாடல்கள் என மக்கள் மனதில் வளர்ந்து செழுமை பெற்றுள்ளது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். இவ்வாறு வளரும் தமிழ்மொழியானது இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செல்லும் வகையில் புதிய கலைச் சொற்களை உருவாக்கிக் கொண்டு தமிழ்மொழி தன்னை நாள்தோறும் புதுப்பித்துக் கொண்டே வருகிறது. தமிழ் இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை உருவாக்குகிறது.

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு .................... ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம்
   இ) வருத்தம் ஈ) அசதி
2. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது..............
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
   இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்
3. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ....................
   அ) புதுமை ஆ) பழமை
   இ) பெருமை ஈ) சீர்மை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. ஏற்றத் தாழ்வற்ற .................. அமைய வேண்டும்.
5. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் .............. சுருங்கி விட்டது.
6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் .............

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. சமூகம் – வளர்ச்சி
8. விளைவு – கடல்
9. மேதினி – மக்கள் குழு
10. ஆழி – உலகம்

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. நாள்தோறும் –
12. அடிப்படை –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
14. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
15. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
16. மாத்திரை என்பது யாது?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. தமிழ்க்கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.
18. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?
19. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீ எவற்றைக் கருதுகிறாய்?

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'இன்பத் தமிழ்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

## கூடுதல் வினாக்கள்

**பொருள் தருக**

| | | |
|---|---|---|
| அங்கண் | - | அழகிய இடம் |
| ஞாயிறு | - | சூரியன் |
| திங்கள் | - | நிலவு |
| கோடு | - | சிகரம் |
| தார் | - | மாலை |
| அளி | - | கருணை |
| மேரு | - | இமயமலை |

**பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| வெண்குடை | = | வெண்மை+குடை |
| ஆணைச்சக்கரம் | = | ஆணை + சக்கரம் |
| கொங்கலர் | = | கொங்கு + அலர் |
| அங்கண் | = | அம் + கண் |

**எதிர்ச்சொல் தருக**

| | | |
|---|---|---|
| போற்றுதும் | × | தூற்றுதும் |
| வழங்கும் | × | பெறும் |
| மேல் | × | கீழ் |
| இடம் | × | வலம் |

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **குடிமக்கள் காப்பியம் என்று போற்றப்படும் நூல் ...............**
   அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
   இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி **[விடை: ஆ) சிலப்பதிகாரம்]**
2. **இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படும் நூல்கள் ...............**
   அ) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம், குண்டலகேசி
   இ) மணிமேகலை, குண்டலகேசி ஈ) மணிமேகலை, வளையாபதி
   **[விடை: அ) சிலப்பதிகாரம், மணிமேகலை]**
3. **ஆத்திமலர் மாலையை அணிந்தவன் ..................**
   அ) சேரர் ஆ) சோழர்
   இ) பாண்டியர் ஈ) பல்லவர் **[விடை: ஆ) சோழர்]**
4. **கதிரவன் .................. மலையை வலப்புறமாகச் சுற்றிவருகிறது.**
   அ) பொதிகை ஆ) இமயம்
   இ) ஜவ்வாது ஈ) விந்திய மலை **[விடை: ஆ) இமயம்]**
5. **இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் கி.பி. ............ ஆம் நூற்றாண்டு.**
   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) கி.பி. 5 **[விடை: அ) கி.பி.2]**

☆ ☆ ☆

## கூடுதல் வினாக்கள்

### பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| தட்பவெப்பம் | = | தட்பம் + வெப்பம் |
| இனப்பெருக்கம் | = | இனம் + பெருக்கம் |
| வழித்தடம் | = | வழி + தடம் |
| தென்திசை | = | தெற்கு + திசை |
| புகலிடம் | = | புகல் + இடம் |
| பறவையினம் | = | பறவை + இனம் |

### சேர்த்து எழுதுக

| | | |
|---|---|---|
| இமயம் + மலை | = | இமயமலை |
| பூச்சி + கொல்லி | = | பூச்சிக்கொல்லி |
| ஓய்வு + எடுக்கும் | = | ஓய்வெடுக்கும் |
| சிட்டு + குருவி | = | சிட்டுக்குருவி |
| பறவை + இயல் | = | பறவையியல் |
| இ + உண்மை | = | இவ்வுண்மை |

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. .................., ...................., .....................ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. **[விடை: நிலவு,விண்மீன், புவியீர்ப்பு புலம்]**
2. வெளிநாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாக திகழ்கிறது ................. **[விடை: தமிழ்நாடு]**
3. ஆண் குருவியின் தொண்டைப் பகுதி ................. நிறத்தில் இருக்கும். **[விடை: கறுப்பு]**
4. பெண் குருவியின் உடல் முழுவதும் ................. நிறத்தில் இருக்கும். **[விடை: மங்கிய பழுப்பு]**
5. சிட்டுக் குருவியின் வாழ்நாள் ................. ஆகும். **[விடை: பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள்]**
6. விரைவாகச் செய்பவனைச் ................. பறந்து விட்டான் என்பர். **[விடை: சிட்டாய்ப்]**
7. பறவை பற்றிய படிப்பு .................ஆகும். **[விடை: ஆர்னித்தாலஜி]**
8. உலகச் சிட்டுக் குருவிகள் நாள் ................. **[விடை: மார்ச் 20]**
9. ‘ காக்கை குருவி எங்கள் சாதி ’ என்று பாடியவர் ................. **[விடை: பாரதியார்]**
10. டாக்டர் சலீம் அலி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் ................. **[விடை: சிட்டுக்குருவியின் வீழ்ச்சி]**
11. கப்பல் பறவை ................., ................ என்று அழைக்கப்படுகிறது. **[விடை: கப்பல் கூளழைக்கடா, கடல் கொள்ளைப் பறவை]**
12. கப்பல் பறவை .................கி.மீ வரை தரையிறங்காமல் பறக்கும். **[விடை: 400]**
13. தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் ................. **[விடை: சிட்டுக்குருவி]**

☆ ☆ ☆



www.surabooks.com www.Padasalai.Net

ஏழைகள் ஒருமுறை

## அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. கதிரவனின் மற்றொரு பெயர் ....................
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

2. மாடங்கள் என்பதன் பொருள் ................................
அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

3. தரை+இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................
அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும்
இ) தரையுறங்கும் ஈ) தரையறங்கும்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. கழுத்தில் சூடுவது ..................
5. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் ...............
6. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி.........................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. சித்தம் - மலர்தல்
8. அளி - உள்ளம்
9. அலர் - மகரந்தம்
10. கொங்கு - கருணை

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. வெளிநாடு –
12. செயற்கை –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. இயற்கை போற்றத்தக்கது ஏன்?
14. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
15. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
16. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)


17. பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.
18. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றி சிறு குறிப்பு எழுதுக.
19. கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாகக் கூறுக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'சிலப்பதிகாரம்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

# இயல் 3 எந்திர உலகம்



கவிதைப்பேழை

## அறிவியல் ஆத்திசூடி

### நூற் குறிப்பு



'தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்' என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப் பெற்றவர் நெல்லை சு.முத்து. இவர் அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர். விக்ரம் சாராபாய் விண்வெளி மையம், சதீஷ்தவான் விண்வெளி மையம், இந்திய விண்வெளி மையம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியவர். அறிவியல் கவிதைகள், கட்டுரைகள் பலவற்றைப் படைத்துள்ளார். எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

### பாடல்

அறிவியல் சிந்தனை கொள்
ஆய்வில் மூழ்கு
இயன்றவரை புரிந்துகொள்
ஈடுபாட்டுடன் அணுகு
உண்மை கண்டறி
ஊக்கம் வெற்றிதரும்
என்றும் அறிவியலே வெல்லும்
ஏன் என்று கேள்
ஐயம் தெளிந்து சொல்
ஒருமித்துச் செயல்படு
ஓய்வற உழை
ஔடதமாம் அனுபவம் – நெல்லை சு.முத்து

### சொல்லும் பொருளும்

1. இயன்றவரை – முடிந்தவரை
2. ஒருமித்து – ஒன்றுபட்டு
3. ஔடதம் – மருந்து

### விளக்கவுரை

அறிவியல் என்பது நம் கண்முன் காணும் பொருள்களைப் பற்றியும் அதன் செயலாக்கத்தினை பற்றிய நிகழ்வுகளுக்கான காரண காரியங்களை மிகத்துல்லியமாக எடுத்துக்கூறுவது. நம்முடைய சிந்தனைகளும் அறிவியல் முறைப்படி இருக்கவேண்டும். சூரியன், சந்திரன் சுழற்சி, இரவுபகல் மாற்றம் போன்ற இயற்கை நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்து ஏன்? எதற்கு?எப்படி? என்ற வினாக்களுக்கு ஆராய்ச்சி செய்து விடையளித்த அறிவியல் அறிஞர்களைப் போல் நாமும் முழுமனதுடன் ஆராய வேண்டும்.

ஒரு பொருளின் உண்மைத்தன்மையை அறிய பல முறை ஆய்வு செய்து புரிந்து கொள்ள வேண்டும்.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0


எச்செயலையும் ஈடுபாட்டுடன் அதாவது விருப்பத்தோடு செய்தால் மட்டுமே நற்பலன் கிடைக்கும். நம் நுண்ணறிவின் துணை கொண்டு அறிவியல் கூறும் உண்மைகளைக் கண்டு அறிந்து தெளிவு பெற வேண்டும். ஊக்கம் என்பது தன்முனைப்பு. நாம் மேற்கொள்ளும் ஆய்வுகளை முழுமுயற்சியுடன் செய்தால் அதில் நிச்சயம் வெற்றி பெறமுடியும். இன்று அறிவியல் இல்லையெனில் நாம் இல்லை என்னும் அளவிற்கு அறிவியல் கொடுத்த கொடைகள் பல. இச்செயல்களால் அறிவியல் வெற்றி பெற்றுள்ளது.

எதனையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல் ஏன்? என்று கேட்டுத் தெளிவடைய வேண்டும். நாம் ஒரு கருத்தைத் தெரிவிக்க எண்ணினால், அதனைப் பற்றிப் பல கோணங்களில் ஆராய்ந்து நாம் தெளிவு பெற்றவுடன்தான் அக்கருத்தைப் பற்றி பிறரிடம் கூற வேண்டும்.

'ஊருடன் ஒத்து வாழ்' என்பது போல் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயல்பட வேண்டும். நம் கருத்தைப் பிறர் ஏற்கவேண்டும், மற்றவர்களோடு சேர்ந்து செயல்பட வேண்டும். நாம் வெற்றி ஒன்றை இலக்காகக் கொண்டு ஓய்வில்லாமல் செயலாற்ற வேண்டும். நாம் பெறும் பட்டறிவும் படிப்பறிவும் நமக்குப் பாடங்கள். பட்டறிவு என்ற அனுபவமானது நம் தவறுகளைத் திருத்தும். அது நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்தரும் என்பதை நாம் உணர்வோம்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. உடல் நோய்க்கு ............. தேவை**

அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

[விடை: **அ) ஔடதம்**]

**2. நண்பர்களுடன் .............. விளையாடு**

அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு இ) தனித்து ஈ) பகைத்து

[விடை: **அ) ஒருமித்து**]

**3. 'கண்டறி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) கண் + அறி ஆ) கண்டு + அறி

இ) கண்ட + அறி ஈ) கண் + டறி [விடை: **ஆ) கண்டு + அறி**]

**4. 'ஓய்வற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) ஓய்வு + அற ஆ) ஓய் + அற

இ) ஓய் + வற ஈ) ஓய்வு + வற [விடை: **அ) ஓய்வு + அற**]

**5. ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............**

அ) ஏன்என்று ஆ) ஏனென்று

இ) ஏன்னென்று ஈ) ஏனன்று [விடை: **ஆ) ஏனென்று**]

**6. ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) ஔடதமாம் ஆ) ஔடதம்ஆம்

இ) ஔடதாம் ஈ) ஔடதஆம் [விடை: **அ) ஔடதமாம்**]


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## எதிர்ச்சொற்களைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| அணுகு | × | தெளிவு |
| ஐயம் | × | சோர்வு |
| ஊக்கம் | × | பொய்மை |
| உண்மை | × | விலகு |

விடை :

| | | |
|---|---|---|
| அணுகு | × | விலகு |
| ஐயம் | × | தெளிவு |
| ஊக்கம் | × | சோர்வு |
| உண்மை | × | பொய்மை |

## பாடல் வரிகளுக்கேற்றவாறு முறைப்படுத்துக

1. **சிந்தனை கொள் அறிவியல் ..........................................................** ※
   **விடை :** அறிவியல் சிந்தனை கொள்.
2. **சொல் தெளிந்து ஐயம் ..........................................................**
   **விடை :** ஐயம் தெளிந்து சொல்.
3. **கேள் ஏன் என்று ..........................................................**
   **விடை :** ஏன் என்று கேள்.
4. **வெல்லும் என்றும் அறிவியலே ..........................................................**
   **விடை :** அறிவியலே என்றும் வெல்லும்.

## குறுவினா

1. **மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?** ※
   மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவம்.

## சிறுவினா

1. **பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**
   (i) அறிவியல் பற்றிய சிந்தனைகளை மேற்கொள்ள வேண்டும்.
   (ii) ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.
   (iii) தெளிவாக நம்மால் முடிந்தவரை புரிந்துகொள்ள வேண்டும்.
   (iv) அனைத்து செயல்களையும் ஆர்வத்துடன் அணுகிச் செய்ய வேண்டும்.
   (v) உண்மைத் தன்மையைக் கண்டறிய வேண்டும். முயற்சியே வெற்றி தரும் என்பதை உணர வேண்டும்.
   (vi) அறிவியல் எப்போதும் வெல்லும். எதனையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் ஏன்? என்று வினா எழுப்பி புரிந்துகொள்ள வேண்டும்.
   (vii) சந்தேகமின்றி தெளிவாகப் பேச வேண்டும். அனைவருடனும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். இடைவிடாமல் உழைக்க வேண்டும்.
   (viii) மனிதர்களுக்கு அவரவர் அனுபவமே மருந்தாகும்.

## சிந்தனை வினா

1. **உங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகள் யாவை?**
   (i) சித்த மருத்துவம் (ii) ஓமியோபதி
   (iii) ஆயுர்வேதம் (iv) யுனானி
   (v) அலோபதி (vi) அக்குபஞ்சர்

www.Padasalai.Net

## கற்பவை கற்றபின்

**1. ‘அறிவியல் ஆத்திசூடி’ பகுதியில் உங்களுக்குப் பிடித்த அடியை எழுதி அதன் காரணத்தைக் கூறுக.**

**அறிவியல் ஆத்திசூடி பகுதியில் எனக்குப் பிடித்த அடிகள் :**

1. ஈடுபாட்டுடன் அணுகு 2. ஏன் என்று கேள்

**ஈடுபாட்டுடன் அணுகு :**

நாம் செய்யும் செயல்களை ஈடுபாட்டுடன் செய்தால் மட்டும் தான் சிறப்பாகச் செய்ய இயலும். எனவே ஒரு செயலைச் செய்வதற்கு ஈடுபாடு மிகவும் இன்றியமையாததாகும்.

**ஏன் என்று கேள் :**

யார் எதைச் சொன்னாலும் கண்மூடித்தனமாகச் செம்மறியாட்டுக் கூட்டம் போல் எச்செயலையும் செய்யக்கூடாது. எதற்காகச் செய்கிறோம் என்பதை அறிந்து செய்ய வேண்டும்.

**2. அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கத் தொடர்களை உருவாக்குக.**

**எ.கா.** அறிவியலை வளர்ப்போம் !
உலகை வெல்வோம் !

**அறிவியல் சிந்தனையைத் தூண்டும் முழக்கங்கள்**

இயற்கையை அழிக்காமலே !
அறிவியலாய்வு செய்வோம் !
அவசியத்திற்குப் பயன்படுத்துவோம் !
நன்மைக்கு வழிகாட்டுவோம் !
அளவுடன் அனுபவிப்போம் !
தீமையை விட்டொழிப்போம் !
அணு ஆராய்ச்சி செய்வோம் !
அமைதியைக் காப்போம் !
மருத்துவத்தில் புதுமை காண்போம் !
நோய் நொடியின்றி வாழ்வோம் !

## கூடுதல் வினாக்கள்

**பொருள் தருக**

| | | |
|---|---|---|
| ஆய்வு | - | ஆராய்ச்சி |
| இயன்றவரை | - | முடிந்தவரை |
| அணுகு | - | நெருங்கு |
| ஊக்கம் | - | முயற்சி |
| வெல்லும் | - | வெற்றிபெறும் |
| ஐயம் | - | சந்தேகம் |
| ஒருமித்து | - | ஒன்றுபட்டு |
| ஔடதம் | - | மருந்து |

**பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| கண்டறி | = | கண்டு + அறி |
| ஓய்வற | = | ஓய்வு + அற |
| ஏனென்று | = | ஏன் + என்று |

**எதிர்ச்சொல் தருக**

| | | |
|---|---|---|
| அணுகு | × | விலகு |
| ஐயம் | × | தெளிவு |
| ஊக்கம் | × | சோர்வு |
| உண்மை | × | பொய்மை |

☆☆☆



www.surabooks.com www.Padasalai.Net

# கூடுதல் வினாக்கள்

## பொருள் தருக

| | | |
|---|---|---|
| ஆய்வு | - | ஆராய்ச்சி |
| விண் | - | வானம் |
| கோள் | - | கிரகம் |
| ஏவி | - | செலுத்தி |
| உரைக்கின்றான் | - | கூறுகின்றான் |
| இயங்கும் | - | செயல்படும் |
| படைத்தல் | - | உருவாக்குதல் |

## பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| நீல வான் | = | நீலம் + வான் |
| செயற்கைக்கோள் | = | செயற்கை + கோள் |
| அணுவைப் பிளந்து | = | அணுவை + பிளந்து |
| விண்வெளிப் பாதை | = | விண்வெளி + பாதை |
| எந்திர மனிதன் | = | எந்திரம் + மனிதன் |
| செய்தித்தொடர்பு | = | செய்தி + தொடர்பு |

## எதிர்ச்சொல் தருக

| | | |
|---|---|---|
| செயற்கை | × | இயற்கை |
| நகரம் | × | கிராமம் |

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வானையளப்போம் கடல்மீனையளப்போம்' என்று பாடியவர் ..............
   அ) நாமக்கல் கவிஞர் ஆ) கவிமணி
   இ) பாரதியார் ஈ) வாணிதாசன் [விடை: இ) பாரதியார்]
2. எலும்பும் தசையும் இல்லாது இயங்குவது ..............
   அ) நாமக்கல் கவிஞர் ஆ) கவிமணி
   இ) இரும்பு மனிதன் ஈ) எந்திரமனிதன் [விடை: ஈ) எந்திரமனிதன்]
3. நாளைய மனிதன் அமைக்கவிருக்கும் பாதை ................
   அ) நீர் வழிப்பாதை ஆ) நிலவழிப்பாதை
   இ) விண்வெளிப்பாதை ஈ) மலைப்பாதை [விடை: இ) விண்வெளிப்பாதை]

## குறுவினா

1. **மனிதன் உடலுறுப்பு மாற்றிப் பொருத்துதல் எவ்வாறு நிகழ்த்தினான் ?**
   அறிவியல் வளர்ச்சியால் மனிதனின் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகள் மாற்றிப் பொருத்தி உடலையும் உயிரையும் காக்கிறான்.

☆☆☆

www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

உரைநடை உலகம்

# கணியனின் நண்பன்



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நுட்பமாகச் சிந்தித்து அறிவது .............**

அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு
இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு **[விடை: ஆ) நுண்ணறிவு]**

**2. தானே இயங்கும் எந்திரம் .............**

அ) கணினி ஆ) தானியங்கி
இ) அலைபேசி ஈ) தொலைக்காட்சி **[விடை: ஆ) தானியங்கி]**

**3. 'நின்றிருந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**

அ) நின் + றிருந்த ஆ) நின்று + இருந்த
இ) நின்றி + இருந்த ஈ) நின்றி + ருந்த **[விடை: ஆ) நின்று + இருந்த]**

**4. 'அவ்வுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............** ※

அ) அவ்வு + ருவம் ஆ) அ + உருவம்
இ) அவ் + வுருவம் ஈ) அ + வுருவம் **[விடை: ஆ) அ + உருவம்]**

**5. மருத்துவம் + துறை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) மருத்துவம்துறை ஆ) மருத்துவதுறை
இ) மருந்துதுறை ஈ) மருத்துவத்துறை **[விடை: ஈ) மருத்துவத்துறை]**

**6. செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) செயலிழக்க ஆ) செயல்இழக்க
இ) செயஇழக்க ஈ) செயலிலக்க **[விடை: அ) செயலிழக்க]**

**7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் .............**

அ) போக்குதல் ஆ) தள்ளுதல்
இ) அழித்தல் ஈ) சேர்த்தல் **[விடை: ஈ) சேர்த்தல்]**

**8. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் .............**

அ) அரிது ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது **[விடை: அ) அரிது]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை .......... . **[விடை: எந்திரங்கள்]**

2. தானியங்கிகளுக்கும், எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு .............
**[விடை: செயற்கை நுண்ணறிவு]**



enquiry@surabooks.com
Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ............. .
[விடை: டீப் ப்ளூ]

4. 'சோபியா' ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ........... . [விடை: சவுதி அரேபியா] ※

## சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

1. தொழிற்சாலை ..........................................................................

விடை : எங்கள் பகுதியில் **தொழிற்சாலை** மூலம் வெளியேறும் கழிவுகள் மிகுந்து விட்டன.

2. உற்பத்தி ..........................................................................

விடை : நம் நாட்டில் விளையும் உணவு தானியங்களை மேலும் **உற்பத்தி** செய்து தன்னிறைவை அடையவேண்டும்.

3. ஆய்வு ..........................................................................

விடை : அறிவியல் அறிஞர்கள் தங்கள் **ஆய்வு** தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணுவர்.

4. செயற்கை ..........................................................................

விடை : நாம் நமது மண்ணில் இருந்தே **செயற்கைக்** கோள்களை அனுப்பும் திறனைப் பெற்றுள்ளோம்.

5. நுண்ணறிவு ..........................................................................

விடை : இயந்திர மனிதர்கள் தங்கள் **நுண்ணறிவுத்** திறனைப் பயன்படுத்தி வேலையை முடிக்கின்றன.

## குறுவினா

1. **'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?** ※

**ரோபோ உருவாக அடிப்படை நிகழ்வு :**

(i) செக் நாட்டைச் சேர்ந்த காரல் சேபெக் என்ற நாடக ஆசிரியர், 1920 ஆம் ஆண்டு நாடகம் ஒன்றை எழுதினார்.

(ii) அதில் 'ரோபோ' என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார். ரோபோ என்ற சொல்லுக்கு அடிமை என்று பொருள்.

(iii) அந்நாடகத்தில் ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாகக் காட்சிகளை அமைத்திருந்தார். இந்நிகழ்வே, ரோபோ என்னும் சொல் உருவாக அடிப்படை நிகழ்வானது.

2. **'டீப் ப்ளூ' - மீத்திறன் கணினி பற்றி எழுதுக.**

**'டீப் ப்ளூ' – ரோபோ :**

(i) ஐ.பி.எம். என்னும் நிறுவனம் உருவாக்கிய மீத்திறன் கணினிதான் 'டீப் ப்ளூ'.

(ii) இது 1997 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த சதுரங்கப் போட்டியில் கேரி கேஸ்புரோவ் என்பவருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

## சிறுவினா

1. **எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.**

**எந்திர மனிதனின் பயன்கள் :**

(i) தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்தல், பழுதுகளை நீக்குதல் போன்ற பணிகளைச் செய்தல்.

(ii) மருத்துவத்துறையில் நோயின் அறிகுறிகளைக் கண்டறிதல்.

(iii) சிக்கலான அறுவை சிகிச்சைகளைச் செய்தல்.

**2. துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?**

துருவப் பகுதிகளில் நிகழும் தட்ப வெப்ப நிலை, மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்றதல்ல. எனவே அப்பகுதிகளில் ஆய்வு செய்வதற்கு எந்திர மனிதர்களை அனுப்புகிறார்கள்.

## சிந்தனை வினா

**1. உங்களுக்கென ஒரு எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.**

| | |
|---|---|
| 1 | விண்வெளிக்கு என்னை அழைத்துச் செல்வதற்கும், ஆய்வு செய்வதற்கும். |
| 2 | வாகனம் ஓட்டுவதற்கும் |
| 3 | இராணுவத்தில் உயிர் பலியாவதைத் தடுக்கும் பணிக்கு அனுப்புவேன். |
| 4 | போக்குவரத்துக் காவல் துறைக்குப் பதிலாக ரோபோவைப் பயன்படுத்துவேன். |
| 5 | கட்டிட வேலைகள் செய்வதற்கும் |
| 6 | உடற்பயிற்சி செய்வதற்கும் |
| 7 | வனவிலங்குகள் நடமாட்டங்களை அறிவதற்கும் |
| 8 | என்னோடு விளையாடுவதற்கும் |
| 9 | வீடு, அலுவலகம், நிறுவனங்களுக்குக் காவல் பணி செய்வதற்கும் |
| 10 | கல்வி கற்றுத்தருவதற்கும் |
| 11 | கழிவறையைச் சுத்தம் செய்வதற்கும். |
| 12 | ஆழ்கடலில் மனிதன் செல்லாமல் ஆய்வு செய்வதற்கும் ரோபோக்களைப் பயன்படுத்துவேன். |

## கற்பவை கற்றபின்

**1. உங்களை ஓர் எந்திரமனிதனாகக் கற்பனை செய்துகொண்டு நண்பர்களுடன் உரையாடுக.**

**மாணவன் 1** : இன்று நம் வகுப்பிற்கு ரோபோ வரப் போவதாக நம் ஆசிரியர் கூறினாரே? கண்டிப்பாக வருமா?

**மாணவன் 2** : கண்டிப்பாக வரும். ரோபோ என்றால் என்ன? உனக்குத் தெரியுமா?

**மாணவன் 1** : ரோபோ என்பதைத் தமிழில் தானியங்கி என்று கூறுவோம். இது நடைமுறையில் இயந்திர வடிவுடைய மெய்நிகர் முகவர் ஆகும். இதோ ரோபோ வந்துவிட்டதே. வா ரோபோ உன்னைத்தான் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ரோபோ** : வணக்கம். நான் வரும் வழியில் போக்குவரத்து நெரிசல் இருந்ததால் கொஞ்சம் காலதாமதமாகி விட்டது. தாமதமாக வந்ததற்கு மிகவும் வருந்துகிறேன். என்னை மன்னிக்கவும்.

**மாணவன் 2** : அடடா. இதென்ன நீ மன்னிப்பெல்லாம் கேட்கிறாய்? நீ ஒரு எந்திர மனிதன்தானே.

www.Padasalai.Net
https://t.me/suraguides

www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0


## கூடுதல் வினாக்கள்

### பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| அவ்வுருவம் | – | அ + உருவம் |
| தொழிற்சாலை | – | தொழில் + சாலை |
| தானியங்கி | – | தான் + இயங்கி |
| நுண்ணுணர்வு | – | நுண்மை + உணர்வு |
| கணினித்திரை | – | கணினி + திரை |
| சதுரங்கப்போட்டி | – | சதுரங்கம்+போட்டி |
| வடிவமைத்து | – | வடிவு + அமைத்து |
| குடியுரிமை | – | குடி + உரிமை |

### சேர்த்து எழுதுக

| | | |
|---|---|---|
| தலை + அசைத்து | = | தலையசைத்து |
| ஆயத்தம் + ஆனான் | = | ஆயத்தமானான் |
| துருவம் + பகுதி | = | துருவப்பகுதி |
| நுண்மை + அறிவு | = | நுண்ணறிவு |
| செயல் + இழக்க | = | செயலிழக்க |
| செயற்கை + கோள் | = | செயற்கைக்கோள் |
| பெருமை + கடல் | = | பெருங்கடல் |
| அ + முயற்சி | = | அம்முயற்சி |

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ரோபோ என்ற சொல்லுக்கு ................. என்று பொருள். **[விடை: அடிமை]**
2. மனிதர்களைப் போல் செயல்களை நிறைவேற்றும் தானியங்கி எந்திரம் என்று விளக்கம் அளித்தது ................. **[விடை: பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம்]**
3. ஐக்கிய நாடுகள் சபை சோபியாவுக்கு வழங்கிய பட்டம் ................. **[விடை: புதுமைகளின் வெற்றியாளர்]**
4. மனிதர்கள் செல்ல முடியாத இடம் ................. **[விடை: துருவப்பகுதி]**
5. துருவப்பகுதிகளில் ஆய்வு நடத்த பயன்படுவது ................. **[விடை: ரோபோக்கள்]**

☆☆☆

www.surabooks.com www.Padasalai.Net


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. திருக்குறள் .................... நூல்களுள் ஒன்று.
அ) காப்பியம் ஆ) பதினெண் கீழ்க்கணக்கு
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண் மேல் கணக்கு

2. நண்பர்களுடன் .................... விளையாடு.
அ) ஒருமித்து ஆ) மாறுபட்டு
இ) தனித்து ஈ) பகைத்து

3. விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................
அ) விண் + வளி ஆ) விண் + வெளி
இ) விண் + ஒளி ஈ) விண் + வொளி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. ஒருவர்க்குச் சிறந்த அணி ..........................
5. உடல் நோய்க்கு ..................... தேவை.
6. தானே இயங்கும் இயந்திரம் ..................................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. அணுகு – தெளிவு
8. ஐயம் – சோர்வு
9. ஊக்கம் – பொய்மை
10. உண்மை – விலகு

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. ஆய்வு –
12. தொழிற்சாலை –

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?
14. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
15. 'டீப் புளூ' – மீத்திறன் கணினி பற்றி எழுதுக.
16. மொழி இறுதியில் வராத மெய்கள் என்னென்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. செயற்கைக்கோள் எவற்றுக்கெல்லாம் பயன்படுகிறது?
18. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக.
19. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'செயற்கரிய' எனத் தொடங்கும் திருக்குறள்.
'அன்பின்' எனத் தொடங்கும் திருக்குறள்.

☆☆☆

# இரண்டாம் பருவம்



# இயல் 1 கண்ணெனத் தகும்

கவிதைப்பேழை

## மூதுரை

### நூற் குறிப்பு

இந்நூலின் ஆசிரியர் ஔவையார். இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெற்றது. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

### பாடல்

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

– ஔவையார்

### சொல்லும் பொருளும்

1. மாசற – குற்றம் இல்லாமல்
2. சீர்தூக்கின் – ஒப்பிட்டு ஆராய்ந்தால்
3. தேசம் – நாடு

### பொருளுரை

மன்னனையும் குற்றம் இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

### விளக்கவுரை

மிக உயர்ந்த நிலையில் இருப்பவன் மன்னன். அத்தகு மன்னனையும் குற்றம் நீங்கக் கற்றவனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னனைவிடக் கற்றவன் சிறப்புடையவன் என்கிறார் ஔவையார். எப்படி எனில், மன்னனுக்கு அவனது ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் மட்டுமே சிறப்பு. கற்றவனுக்கோ அவன் சென்ற இடத்திலெல்லாம் சிறப்பிக்கப்பெறுவான்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாணவர்கள் நூல்களை ................. கற்க வேண்டும்.**

அ) மேலோட்டமாக ஆ) மாசுற
இ) மாசற ஈ) மயக்கமுற

[விடை: இ) மாசற]



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

[விடை: ஆ) இடம் + எல்லாம்]

**3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) மாச + அற ஆ) மாசு + அற

இ) மாச + உற ஈ) மாசு + உற [விடை: ஆ) மாசு + அற]

**4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம்இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

[விடை: அ) குற்றமில்லாதவர்]

**5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார் [விடை: ஆ) சிறப்புடையார்]

## குறுவினா

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?** ※

(i) மன்னனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கற்றவரே சிறந்தவர்.

(ii) மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. ஆனால் கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

## சிந்தனை வினா

**1. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.** ※

**கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகள் :**

(i) கல்லாதவர் எவராலும் மதிக்கப்பட மாட்டார்.

(ii) வீட்டில் பெரிய பிள்ளையாக இருந்தாலும் கற்கவில்லையெனில் பெற்றோர் அவனை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டார்கள்.

(iii) நன்மை தீமைகளைப் பகுத்தறிய இயலாது. எல்லோராலும் இகழப்படுவான்.

**2. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

(i) கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத்தக்கது.

(ii) கல்வி பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும்.

(iii) கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது.

(iv) அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவராகக் கருதப்படுவர்.

(v) மன்னனாக இருந்தாலும் அவனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு கிடைக்கும். ஆனால் கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு கிடைக்கும்.

## கற்பவை கற்றபின்

**1. கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் பேசுக.**

வணக்கம்! கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கு ஒப்பான சிறந்த செல்வம் வேறு எதுவுமில்லை. கல்வியை யாராலும் அழிக்க முடியாத செல்வமாகும். 'இளமையில் கல்' என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இளம்வயதில் படிப்பது நம் மனதில் அப்படியே பசுமரத்தாணி போல் பதிந்துவிடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்விதான் ஒருவனை அறிவாளி ஆக்குகிறது. அறியாமை எனும் இருட்டைக் கல்வி எனும் ஒளிதான் போக்குகிறது. நல்ல புத்தகங்கள் அறிவு கண்ணைத் திறக்கும் ஒரு திறவுகோல். கல்வி ஒருவனை மட்டும் மேம்படுத்தாது. அவனைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தையும், ஏன் நாட்டையுமே அது உயர்த்த உதவும்.

கல்வியின் பெருமையைப் பழம் பாடல் ஒன்று அழகாகப் பேசும். கல்வி என்பது அழியாத செல்வம். அது காலத்தால் அழியாது. கள்வராலும் கவர முடியாதது. வெள்ளத்தால் போகாது. தீயினாலும் வேகாது. கல்விச் செல்வம் தவிர ஏனைய செல்வங்களைக் கள்வர்கள் திருடிச் சென்றுவிட முடியும்; வெள்ளம் அடித்துக் கொண்டு போகும்.

தீ தனது செந்நிற ஒளியாய் பொசுக்க முடியும்.

ஒரு முறை பாரதியார் எட்டயபுர அரச சபையில் இருந்து தன் ஊருக்குத் திரும்பிச் சென்றார். அரசர் கொடுத்த பணத்தில் நல்ல நல்ல நூல்களை வாங்கி வந்தார். பாரதியின் மனைவி செல்லம்மா தன் கணவர் தமக்குப் பிடித்ததாய் வாங்கி வருவார் என்று ஆசையாக வாசலில் நின்றவாறு அவரது வரவை எதிர்நோக்கிப் பார்த்திருந்தார். ஆனால், தன் கணவரோ புத்தகங்களாக வாங்கி வந்ததைக் கண்டு சினம் கொள்கிறாள். சினம் கொண்ட மனைவியைப் பாரதியார் சமாதானப்படுத்துகிறார்.

கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாது. கொடுத்தாலும் குறையாது. எடுத்தாலும் குறையாது.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

இறைக்க இறைக்கச் சுரக்கும் நீர் போல அறிவானது கொடுக்கக் கொடுக்க வளர்ந்து கொண்டே இருக்கும். பெற்றோர்களுக்கு ஒரு வார்த்தை! உங்கள் குழந்தைக்குக் கல்வியின் அவசியத்தைப் புரிய வையுங்கள். கற்பதில் விருப்பத்தை உண்டாக்குங்கள். "ஒரு பெண் கல்வி கற்றால் அது அவளது குடும்பத்துக்கே கற்பிப்பதுபோல்" என்பார் பாரதிதாசன்.

கல்விதான் எது நல்லது? எது கெட்டது? எனப் பகுத்தறியக் கற்றுக் கொடுக்கும். ஒரு நாணயத்துக்கு இரு பக்கம் உண்டு என்பதையும் உணர வைக்கும். எந்த விஷயத்தையும் உற்று நோக்கக் கற்றுக் கொடுக்கும். சமயோசிதமாக நடந்து கொள்ளவும் கல்வியறிவே கைக் கொடுக்கிறது. இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன் நன்றி! வணக்கம்.

**2. கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள் எவையேனும் இரண்டனைப் பெரியோர்களிடம் கேட்டு எழுதி வருக.**

(i) ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
(ii) ஓதுவது ஒழியேல்.
(iii) அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.

இரண்டாம் பருவம்

(iv) இளமையில் கல்வி, கல் மேல் எழுத்து.
(v) எண் இல்லாதவர் கண் இல்லாதவர். எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்.
(vi) ஓதார்க்கு இல்லை. உணர்வோடு ஒழுக்கம்.
(vii) கல்வி அழகே அழகு.
(viii) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
(ix) கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மூதுரை என்ற சொல்லின் பொருள் .......... ஆகும். [விடை: **மூத்தோர் கூறும் அறிவுரை**]
2. பிறருக்கு தந்தாலும் குறையாமல் வளர்வது .......... ஆகும். [விடை: **கல்வி**]
3. மன்னரை விட சிறந்தவர் .......... ஆவர். [விடை: **கற்றோரே**]
4. அழியாச் செல்வம் .......... ஆகும். [விடை: **கல்வி**]

### பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| அழியாச்செல்வம் | = | அழியா + செல்வம் |
| சிறப்புடையார் | = | சிறப்பு + உடையார் |
| சிறப்பில்லை | = | சிறப்பு + இல்லை |
| இடமெல்லாம் | = | இடம் + எல்லாம் |
| மாசற | = | மாசு + அற |

### எதிர்ச்சொல் தருக

| | | |
|---|---|---|
| கற்றோர் | × | கல்லாதோர் |
| தன் தேசம் | × | பிற தேசம் |

### குறுவினா

1. **மூதுரை - பெயர்க்காரணம் எழுதுக.**

மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.

2. **ஔவையார் இயற்றிய நூல்கள் யாவை?**

**ஔவையார் இயற்றிய நூல்கள் :**

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை.

3. **ஔவையார் குறிப்பு எழுதுக.**

ஔவையார் என்ற பெயரில் பல பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். சங்க காலம், இடைக்காலம், சோழர் காலம், பிற்காலம் எனப் பல காலங்களில் ஔவையார் என்ற பெயரில் பலர் வாழ்ந்துள்ளனர். அதியமானுக்கு நெல்லிக்கனி கொடுத்த ஔவையாரும் மூதுரை பாடிய ஔவையாரும் வெவ்வேறு காலத்தவர் ஆவர்.

☆ ☆ ☆

www.surabooks.com www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

**பொருள் தருக.**

1. தூற்றும்படி – இகழும்படி
2. மூத்தோர் – பெரியோர்
3. மேதைகள் – அறிஞர்கள்
4. மாற்றார் – மற்றவர்
5. நெறி – வழி
6. வற்றாமல் – குறையாமல்

**பிரித்து எழுதுக.**

1. கைப்பொருள் – கை + பொருள்
2. மானமில்லா – மானம் + இல்லா
3. குணமிருந்தால் – குணம் + இருந்தால்
4. வான்முகடு – வான் + முகடு

**எதிர்ச்சொல் தருக.**

1. மறந்து × நினைத்து
2. வளர்ந்து × தளர்ந்து
3. தூற்றும் × போற்றும்
4. கோழை × வீரன்
5. வெல்லும் × தோற்கும்
6. துன்பம் × இன்பம்
7. சோம்பல் × சுறுசுறுப்பு
8. வளர்ச்சி × வீழ்ச்சி
9. மேதை × பேதை



### குறுவினா

**1. எவை வற்றாமல் வாழ்ந்திட வேண்டும்?**

பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ்ந்திட வேண்டும்.

**2. மீறக்கூடாது, மாறக்கூடாது - எனப் பாடல் கூறுபவை எவை?**

(i) பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக் கூடாது.
(ii) பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக்கூடாது.

**3. அறிவை எந்த அளவுக்கு வளர்த்துக் கொள்ள வேண்டும்?**

அறிவை வானைத் தொடும் அளவுக்கு வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - குறிப்பு எழுதுக.**

(i) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எளிய தமிழ் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்.
(ii) திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்.
(iii) மக்கள் கவிஞர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.

☆ ☆ ☆

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0


# அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) மாச + அற ஆ) மாசு + அற
   இ) மாச + உற ஈ) மாசு + உற
2. நாம் .............. சொல்படி நடக்க வேண்டும்.
   அ) இளையோர் ஆ) ஊரார்
   இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்
3. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?
   அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. மாணவர் பிறர் ............ நடக்கக் கூடாது.
5. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் .........................
6. அப்துல்கலாம் பிறந்த நாள் ..........................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. சிறப்பு + உடையார் - குழந்தைகள் தினம்
8. நேரு - சிறப்புடையார்
9. கோட்டூர்புரம் - நாடு
10. தேசம் - அண்ணா நூற்றாண்டு நூலகம்

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. ஏட்டுக் கல்வி -
12. மழை பெய்தது -

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
14. எதை நம்பி வாழக் கூடாது?
15. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?
16. காமராசர் செய்த உதவி யாது?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?
18. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?
19. இன எழுத்துகள் என்றால் என்ன?

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'மூதுரை' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

இரண்டாம் பருவம்

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net www.surabooks.com

# இயல் 2 பாடறிந்து ஒழுகுதல்

கவிதைப்பேழை

## ஆசாரக்கோவை

### நூற் குறிப்பு

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் வண்கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு **நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு** என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

### பாடல்

நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் – இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து

– பெருவாயின் முள்ளியார்

### விளக்கவுரை

தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாதிருக்க வேண்டும். பிறர் நமக்குச் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் இனிமையான சொற்களைப் பேசிப் பழக வேண்டும். மற்ற உயிர்களுக்குத் தீமை தரும் செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும். கல்வியறிவினைப் பெற்று, பிறருக்கு உதவி செய்யும் பண்பினைப் பெற வேண்டும். சிறந்த அறிவுடையவராய் இருத்தல் வேண்டும். நற்பண்புடைய நல்லவர்களோடு நட்புக் கொள்ளுதல் வேண்டும். ஆகிய எட்டும் ஒழுக்கங்களின் வித்து என்று கூறும்விதை ஆகும். இந்த குணங்களில் இருந்துதான் நல்லொழுக்கம் அனைத்தும் உருவாகிறது என்று ஆசாரக்கோவை கூறுகிறது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பிறரிடம் நான் .............. பேசுவேன்.**

அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல்
இ) வன்சொல் ஈ) கொடுஞ்செல் [விடை: ஆ) இன்சொல்]

**2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது ............... ஆகும்.** ※

அ) வம்பு ஆ) அமைதி
இ) அடக்கம் ஈ) பொறை [விடை: ஈ) பொறை]


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. **அறிவு + உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) அறிவுடைமை ஆ) அறிவுஉடைமை

இ) அறியுடைமை ஈ) அறிஉடைமை[விடை: அ) அறிவுடைமை]

4. **இவை + எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...................**

அ) இவைஎட்டும் ஆ) இவையெட்டும்

இ) இவ்வெட்டும் ஈ) இவ்எட்டும் [விடை: ஆ) இவையெட்டும்]

5. **நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................**

அ) நன்றி + யறிதல் ஆ) நன்றி + அறிதல்

இ) நன்று + அறிதல் ஈ) நன்று + யறிதல்

[விடை: ஆ) நன்றி + அறிதல்]

6. **பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........................**

அ) பொறுமை + உடைமை ஆ) பொறை + யுடைமை

இ) பொறு + யுடைமை ஈ) பொறை + உடைமை

[விடை: ஈ) பொறை + உடைமை]

## குறுவினா

1. **எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?** ※

நாம் எந்த உயிருக்கும் துன்பம் செய்யாதிருக்க வேண்டும்.

2. **நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?**

நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

## சிறுவினா

1. **ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?** ※

(i) பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்.
(ii) பிறர் செய்யும் தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல்.
(iii) இனிய சொற்களைப் பேசுதல்.
(iv) எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்.
(v) கல்வி அறிவு பெறுதல்.
(vi) பிறருக்கு உதவுதல்.
(vii) அறிவுடையவராய் இருத்தல்.
(viii) நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல்.

## சிந்தனை வினா

1. **உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.**

(i) பிறருக்கு உதவும் பண்புடையவன்.
(ii) பிறரை மன்னிக்கும் குணம் கொண்டவன்.

இரண்டாம் பருவம்

(iii) நட்பின் சிறப்பை உணர்ந்தவன்.

(iv) சிறியவரையும் மதிக்கும் பெருங்குணம் உடையவன்.

(v) என் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதவன்.

**2. நல்ல ஒழுக்கங்களை வித்து எனக் கூறுவதின் காரணத்தைச் சிந்தித்து எழுதுக.**

**நல்ல ஒழுக்கங்களை வித்து எனக்கூறுவதின் காரணம் :**

ஒரு விதையை விதைத்தோமானால் அது வளர்ந்து பல காய்கனிகளைத் தந்து பல தாவரங்களை உருவாக்குகிறது.

ஒழுக்கம் என்ற விதை – கல்வி
மரியாதை
பண்பு
கருணை
உயர்வு
முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.

ஒரு விதை பல மரங்களை உருவாக்குகின்றது. அதுபோல மாணவரின் மனத்தில் ஒழுக்கம் என்ற விதை விதைக்கப்பட்டால் அவன் நல்ல மாணவன் எனப் பெயர் எடுப்பான். ஒழுக்கத்துடன் இருக்கும் மாணவனால் நன்றாகக் கல்வி கற்க இயலும். கல்வி நற்பண்புகளைத் தரும். நன்மை தீமைகளைப் பகுத்தறிய இயலும். பெற்றோர் பெரியோர் என அனைவருடனும் மரியாதையுடன் பழக இயலும். அவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நல்வழியில் நடப்பான். இவற்றால் அவன் உயர்வு பெற்று வாழ்வில் முன்னேற்றம் அடைவான். எனவே மாணவர்கள் நன்முறையில் இருப்பதற்கு ஒழுக்கமே அடித்தளமாக உள்ளது. எனவே நல்லொழுக்கமே வித்து என்பதை உணர்ந்து மாணவர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகத் திகழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. நாம் எந்தெந்த வகையில் பிறருக்கு உதவலாம் என்பது குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுக.**

**மாணவன் 1** : என்னடா இங்கு தனியாக அமர்ந்து கொண்டிருக்கிறாய்?

**மாணவன் 2** : என்னவென்று சொல்வது. இன்று என் அம்மா என்னை நன்றாகத் திட்டிவிட்டார்கள். அதனால் காலையில் சிற்றுண்டியே வேண்டாம் எனக் கூறிவிட்டேன். கொஞ்ச நேரம் கழித்து என்னைச் சமாதானப்படுத்திவிட்டு அறிவுரையும் கூறினார்.

**மாணவன் 1** : பிறகென்ன? அதுதான் சமாதானப்படுத்தி விட்டார்களே?

**மாணவன் 2** : அதெல்லாம் சரிதான். அப்போது 'பிறருக்கு உதவியாய் இல்லை என்றாலும் உபத்திரமாக இருக்காதே' என்று கூறினார். அதைப் பற்றிதான் சிந்தித்துக் கொண்டு உள்ளேன். எவ்வாறு பிறருக்கு உதவலாம் என எனக்கு நானே கேள்வி கேட்டுக் கொண்டே உள்ளேன்.

**மாணவன் 1** : நீ செய்யாமல் இருப்பதால் அவர்களே செய்து விடுகிறார்கள். இனிமேல் நீ தினமும் காலையும் மாலையும் அம்மாவிற்கு உதவும் பொருட்டு கடைக்குச் செல்லுதல், வீட்டில் உள்ள சிறு சிறு வேலைகள் செய்தல், வாரம் ஒருமுறை புத்தகங்களை அடுக்கி வைத்தல், உன்னுடைய

காலணி, காலுறைகளைத் தூய்மையாக்குதல், சன்னல், கதவுகளைத் துடைத்தல், அப்பாவின் இரு சக்கர வாகனத்தினைத் தூய்மை செய்தல் போன்றவை நம் வீட்டில் உள்ளவர்களுக்குச் செய்யும் வேலைகளாகும்.

**மாணவன் 2** : இதையெல்லாம் நான் செய்ததே கிடையாது.

**மாணவன் 1** : பொது இடங்களில் நீ பிறருக்கு உதவுதல் பற்றிக் கூறுகிறேன் கேள். பேருந்தில் பயணம் செய்யும்போது முதியோர், உடல் ஊனமுற்றோர், நோயாளி போன்றோர் இருக்கை இல்லாமல் நின்று கொண்டிருந்தால் அவர்களுக்கு இடம் கொடுப்பது, சாலையைக் கடக்க இயலாதவரைக் கையைப் பிடித்துக் கொண்டு சென்று சாலையைக் கடக்க உதவி செய்வது, வகுப்பில் சக மாணவர்களில் எவரேனும் மெல்லக் கற்போராக இருந்தாலும் அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்வது, அதாவது கணிதம் சொல்லித் தருவது, படிப்பதற்குச் சொல்லித் தருவது என இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**மாணவன் 2** : இதுவரை நான் இவ்வாறெல்லாம் நினைத்துக் கூட பார்த்ததில்லை. இனிமேல் வீட்டிலும் பொது இடங்களிலும் பிறருக்கு உதவியாக இருப்பேன். நன்றி கணேஷ்.

**2. இந்தப் பாடலில் கூறப்படும் கருத்துகளுக்குப் பொருத்தமான திருக்குறள் அதிகாரங்களின் தலைப்புகளைப் பட்டியலிடுக.**

(i) செய்ந்நன்றியறிதல்

(ii) பொறையுடைமை

(iii) இனியவை கூறல்

(iv) இன்னா செய்யாமை

(v) கல்வி

(vi) ஒப்புரவு அறிதல்

(vii) அறிவுடைமை

(viii) நட்பு.

**3. "கூடா நட்புக் கேடாய் முடியும்" என்னும் கருத்து அமைந்த கதை ஒன்று கூறுக.**

வந்தவாசி கிராமத்தில் வசிக்கும் திவ்யா ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவி. அவளுக்கு ஒரு தீய பழக்கமுடைய தோழி இருப்பதை அறிந்த திவ்யாவின் தாய், ஒரு தீய நட்பு நல்லவர்களையும் கெடுத்துவிடும் எனவே அந்த நட்பைத் துண்டிக்க வேண்டும் என முடிவெடுத்தார்.

ஒருநாள் அவர் திவ்யாவை அழைத்தார். அவருடைய கையில் ஒரு பெரிய பெட்டியில் நிறைய மாம்பழங்கள் இருந்தன. அந்த பழங்களைக் கண்ட திவ்யாவின் கண்கள் ஆனந்தத்தில் விரிந்தன. ஆர்வத்துடன் ஒரு பழத்தை எடுக்கப்போனவளிடம் தாய் தடுத்தார். அவற்றுள் நல்ல பழங்களாகத் தேர்ந்தெடுத்து இரண்டு கூடைகளில் வைக்கும்படி கூறினாள். அதன்படியே திவ்யா நல்ல பழங்களாகத் தெரிவு செய்து இரண்டு கூடைகளில் நிரப்பினாள். தாய் தனியே வைத்திருந்த ஓர் அழுகிய பழத்தை எடுத்தார். திவ்யா புரியாமல் பார்த்தாள். தாய் அந்த அழுகிய பழத்தை நல்ல பழங்கள் இருக்கும் ஒரு கூடையின் நடுவே வைத்தார்.

இரண்டாம் பருவம்

"ஏம்மா நல்ல பழங்களோடு கெட்ட பழத்தையும் வைக்கிறீர்கள்?" என்றாள்.

"எல்லாம் ஒரு காரணம்தான், இந்த இரண்டு கூடைகளையும் அப்படியே கொண்டு போய் ஒரு இடத்தில் வை. நான் சொல்லும் போது எடுத்து வா" என்றார் தாய். அவளும் அப்படியே செய்தாள்.

சில நாட்களுக்குப் பின் திவ்யாவின் தாய் மறுபடியும் அழைத்தார். அந்தப் பழக் கூடைகளை எடுத்து வரச்சொன்னார். பழக் கூடைகளை எடுத்து வந்தாள். அழுகிய பழம் வைத்த கூடையில் இருந்த பழங்கள் எல்லாமே அழுகிப்போய் இருந்தன. மற்றக் கூடையில் இருந்த பழங்கள் பழுதடையாமல் அப்படியே இருந்தது. இதனைப் பார்த்த திவ்யா வருந்தினாள். நன்றாக இருந்த பழங்கள் கெட்டுப் போய்விட்டனவே என்று அவளுக்கு அழுகையே வந்து விட்டது.

தாய் அருகில் அமரவைத்து மெதுவாய்ச் சொன்னார்... "பார்த்தாயா? ஒரு அழுகிய மாம்பழம் ஒரு கூடை நல்ல பழங்களை அழுக வைத்துவிட்டது. தீய நட்பும் இப்படித்தான். 'கூடா நட்பு கேடாய் முடியும்'. எனவே நட்பைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை. உண்மை நண்பர்கள் உங்களுடைய மகிழ்ச்சியின் போது காணாமல் போனாலும் உங்களுடைய துயர வேளையில் நிச்சயம் உங்களோடு இருப்பார்கள்.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. நல்ல மனிதர்களை உருவாக்குவது................ [விடை: **நல்லொழுக்கம்**]
2. அறநூல்கள் விளக்குவன ................ [விடை: **நற்பண்புகள்**]
3. பிறர் நமக்கு செய்த ..................... மறக்கக்கூடாது. [விடை: **உதவியை**]
4. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ..................... [விடை: **ஆசாரக்கோவை**]

### பொருள் தருக

1. வித்து – விதை
2. இன்சொல் – இனியசொல்
3. இன்னாத – துன்பம்
4. ஒப்புரவு – சமமாக பேணுதல்

### குறுவினா

1. **ஆசாரக்கோவை நூல் குறிப்பு எழுதுக.**
   (i) ஆசாரக் கோவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
   (ii) மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத (ஆசாரங்களை) ஒழுக்கங்களை எடுத்துக் கூறும் நூல்.
   (iii) இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

☆ ☆ ☆



www.Padasalai.Net

# கூடுதல் வினாக்கள்

### பொருள் தருக

| | | |
|---|---|---|
| நந்தவனம் | = | பூஞ்சோலை |
| பார் | = | உலகம் |
| பண் | = | இசை |
| இழைத்து | = | பதித்து |

### பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| நீல வான் | = | நீலம் + வான் |
| கண்ணுறங்கு | = | கண் + உறங்கு |
| முத்தேன் | = | மூன்று + தேன் |
| பாட்டிசைத்து | = | பாட்டு + இசைத்து |

### சேர்த்து எழுதுக

| | | |
|---|---|---|
| வாழை + இலை | = | வாழையிலை |
| கை + அமர்த்தி | = | கையமர்த்தி |
| மூன்று + கனி | = | முக்கனி |
| மூன்று + தமிழ் | = | முத்தமிழ் |

### எதிர்ச்சொல் தருக

| | | |
|---|---|---|
| உதித்த | × | மறைந்த |
| போற்ற | × | தூற்ற |

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. வாய்மொழி இலக்கியங்களில் ஒன்று................ [விடை: **தாலாட்டு**]
2. இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் நாடு............... [விடை: **சோழ நாடு**]
3. தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் ..................... இடம் பெறுகின்றன. [விடை: **பாடல்கள்**]
4. பண் என்பதன் பொருள் ..................... [விடை: **இசை**]

## குறுவினா

**1. தாலாட்டு - பெயர்க்காரணம் எழுதுக.**

(i) தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று.

(ii) தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது.

(iii) குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.

**2. தாலாட்டுப் பாடலில் குழந்தை எவ்வாறு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது?**

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

**தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்கள்:** குற்றாலம், தஞ்சைப் பெரியகோவில், சென்னை – மெரினாக் கடற்கரை, மதுரை மீனாட்சியம்மன் கோவில், காஞ்சி காமாட்சியம்மன் கோவில் (காஞ்சிபுரத்தில் புகழ்பெற்ற பல கோவில்கள்)கும்பகோணம் – கோவில்கள், மேட்டூர் அணை, வைகை அணை, கல்லணை, கன்னியாகுமரி இவை போன்ற நிறைய இடங்கள் உள்ளன.

**குற்றாலம் :**

இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அழகிய பின்னணியில் உள்ளது. மழைக்காலத்தில் இங்குள்ள அருவியில் குளிப்பதற்காகச் சுற்றுலாப் பயணிகள் பல பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து குவிகின்றனர்.

குறு ஆல் என்பது ஒரு வகையான ஆலமரம். இம்மரங்கள் அதிகமாகக் காணப்பட்டதால் குற்றாலம் என்ற பெயர் பெற்றுள்ளது. சங்க காலத்தில் இது தேனூர் என்ற பெயரில் அழைக்கப் பெற்றுள்ளது. தென் மேற்கு பருவகாலம் ஆரம்பித்தவுடன் குற்றால அருவியில் நீர் ஆர்ப்பரித்து விழத் தொடங்கிவிடும். ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்கள் 'குற்றால சீசன்' என அழைக்கப்படுகிறது.

குற்றால அருவிகள் தென் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. சிற்றாறு, மணிமுத்தாறு, பச்சையாறு மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளின் பிறப்பிடமாக இம்மலை விளங்குகிறது. குற்றால அருவிக்கரையில் குற்றால நாதர் கோவில் உள்ளது. இங்கு பேரருவி, ஐந்தருவி, சிற்றருவி, பாலருவி, புலியருவி, பழத்தோட்ட அருவி, செண்பகாதேவியருவி, பழைய குற்றால அருவி, தேனருவி என ஒன்பது அருவிகள் உள்ளன.

இங்கு அருவிகளைத் தவிர வேறு சில இடங்களும் பார்க்க வேண்டிய இடங்களாகும். அவை குற்றாலநாதர் கோயில் சித்திர சபை, தொல்லியல் அருங்காட்சியகம் – குற்றாலம், சிறுவர் பூங்கா, கலைவாணர் அரங்கம் ஆகியனவாகும்.

குற்றாலம் ஏழைகளின் சொர்க்கபுரி. இங்கு அகத்திய முனிவர் வாழ்ந்ததாகப் புராணக் கதைகளும் உண்டு. அரிய வகை மூலிகைகளும் நிரம்பிய இடம். மூலிகைக் காடுகளின் வழியாக ஓடிவந்து அருவியாக கொட்டுகின்ற நீரில் குளிப்பதற்காகவே மக்கள் கூட்டம் சேர்கின்றது. மூலிகைக் குளியலான அருவிகளைக் கொண்ட குற்றாலத்தைத் தென்னகத்தின் 'ஸ்பா' எனக் கூறுகிறார்கள். இங்குள்ள அருவியில் குளிப்பது ஆனந்தத்தைத் தருகிறது.

இவ்வளவு இன்பத்தைத் தரும் குற்றாலம் சென்று வந்ததில் எனக்குப் பேரின்பம். மீண்டும் எப்போது அங்கு செல்வோம் என்ற எண்ணத்துடனேயே இருக்கிறேன். மீண்டும் வாய்ப்புக் கிடைத்தால் நண்பர்கள் நாம் அனைவரும் பெற்றோரை அழைத்துக் கொண்டு செல்வோம்.

**ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோவில் :**

10-வது நூற்றாண்டு சோழ அரசர் ராஜராஜனால் கட்டப்பட்ட ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம். சோழ கட்டடக்கலை ஆடம்பரத்திற்கு ஒரு அற்புத உதாரணம் ஆகும். அற்புதமான 14 மாடிகளைக் கொண்ட கிரானைட் கோவில் 216 அடி உயரத்திற்கும், மத்திய ஆலயம் என்ற பீடம் 45.72 சதுர மீ மற்றும் சரியான சன்னதி 30.48 சதுர மீ அளவீட்டிலும் உள்ளது. 60.96 மீட்டர் உயரம் ஒரு சதுர தளத்தில் இருந்து செங்குத்தாக உயரும் ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோவில் விமானம் மற்றும் மேல் தங்க-முலாம் பூசப்பட்ட செம்பு கலசம் 339.5 கிலோ எடையுள்ளது.

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0


20 டன் எடையுள்ள பெரிய காளை, நந்தி, ஒரே கல்லில் இருந்து சிற்பமாக செதுக்கப்பட்டது மற்றும் கருவறைக்கு நேர் எதிராகவே அமர்ந்துள்ளது. ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோவிலின் இந்த மகத்தான அமைப்புக்குள்ளே, 7 மீட்டர் உயர சிவலிங்கம் தலைமை தாங்குகிறது. கோவில் உள் சுவர்களில் மற்றும் கூரையில் அழகான ஓவியங்கள் மற்றும் சிறப்பான சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டிலுள்ள மலைவாசஸ்தலங்கள் :**

கோத்தகிரி மலை வாசஸ்தலம், குன்னூர், ஏற்காடு மலை வாசஸ்தலம், உதகமண்டலம் மலை வாசஸ்தலம், ஏலகிரி மலை வாசஸ்தலம், ஊட்டி மலை வாசஸ்தலம், கொடைக்கானல் மலை வாசஸ்தலம்.

**3. மாமல்லபுரச் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டவை. வேறு எந்தெந்தப் பொருள்களால் சிற்பங்களைச் செய்யலாம் எனக் கலந்துரையாடுக.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

**4. கலைகளுள் ஒன்று சிற்பக்கலை. இது போன்ற பிற கலைகளின் பெயர்களைத் திரட்டி எழுதுக.** ※

**கலைகளின் பெயர்கள் :** ஓவியக்கலை, நடனக்கலை, நாடகக் கலை, இசைக்கலை, கட்டடக்கலை, கவிதைக்கலை, ஒப்பனைக்கலை, தையற்கலை, நீச்சல்கலை இவை போன்ற அறுபத்து நான்கு கலைகள் உள்ளன.

## கூடுதல் வினாக்கள்

**1. மாமல்லபுரத்தில் காண வேண்டிய இடங்கள் யாவை?**

(i) அர்ச்சுனன் தபசு (ii) கடற்கரைக் கோவில்
(iii) பஞ்சபாண்டவர் ரதம் (iv) ஒற்றைக்கல் யானை
(v) குகைக்கோவில் (vi) புலிக்குகை
(vii) திருக்கடல் மல்லை (viii) கிருஷ்ணரின் வெண்ணெய்ப் பந்து
(ix) கலங்கரை விளக்கம்.

**2. சிற்பக்கலை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சிற்பக்கலை நான்கு வகைப்படும். அவை

(i) குடைவரைக் கோயில்கள் (ii) ஒற்றைக் கல் கோயில்கள்
(iii) கட்டுமானக் கோயில்கள் (iv) புடைப்புச் சிற்பங்கள்.

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0

கற்கண்டு

# மயங்கொலிகள்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிரம் என்பது .................... (தலை / தளை) [விடை: தலை]
2. இலைக்கு வேறு பெயர் .................. (தளை / தழை) [விடை: தழை]
3. வண்டி இழுப்பது .................... (காலை / காளை) [விடை: காளை]
4. கடலுக்கு வேறு பெயர் ...................... (பரவை / பறவை) [விடை: பரவை]
5. பறவை வானில் ................ (பறந்தது / பரந்தது) [விடை: பறந்தது]
6. கதவை மெல்லத் .................. (திறந்தான் / திரந்தான்) [விடை: திறந்தான்]
7. பூ ................................ வீசும். (மனம் / மணம்) [விடை: மணம்]
8. புலியின் ..................... சிவந்து காணப்படும். (கன் / கண்) [விடை: கண்]
9. குழந்தைகள் ............................ விளையாடினர். (பந்து / பன்து) [விடை: பந்து]
10. வீட்டு வாசலில் ................ போட்டனர். (கோலம் / கோளம்) [விடை: கோலம்]

### தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக

1. **எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.** ※
   **என்** வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் **மணம்** வீசின.
2. **தேர்த் திருவிலாவிற்குச் சேண்றனர்.**
   தேர்த் திரு**விழா**விற்குச் **சென்றனர்**.
3. **வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.**
   **வாழைப்பழம்** உடலுக்கு மிகவும் **நல்லது.**

### குறுவினாக்கள்

1. **மயங்கொலி எழுத்துகள் யாவை?**
   உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகள் மயங்கொலிகள் எனப்படும்.
   **மயங்கொலி எழுத்துகள் :** ண, ன, ந, ல, ழ, ள, ர, ற
2. **ண, ன, ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கூறுக.**
   (i) **ண – பிறக்கும் முறை :** நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.
   (ii) **ன – பிறக்கும் முறை :** நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.
   (iii) **ந – பிறக்கும் முறை :** நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கும்.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் 3 கூடித் தொழில் செய்

கவிதைப்பேழை

## நானிலம் படைத்தவன்



### நூற் குறிப்பு

முடியரசனின் இயற்பெயர் துரைராசு. பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார். திராவிட நாட்டின் வானம்பாடி என்றும் கவியரசு என்றும் பாராட்டப்பெற்றவர். இப்பாடல் புதியதொரு விதி செய்வோம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

### பாடல்

கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன்பெற்றான்,
மாநிலத்தில் முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல்
நானிலத்தைக் கண்டபெரும் நாகரிக மாந்தன்அவன்,
ஆழக் கடல்கடந்தான் அஞ்சும் சமர்கடந்தான்
சூழும் பனிமலையைச் சுற்றிக் கொடிபொறித்தான்
முக்குளித்தான் ஆழிக்குள் முத்தெடுத்தான் தோணிக்குள்
எக்களிப்பு மீதூர ஏலம் மிளகுமுதற்,
பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்,
அஞ்சாமை மிக்கவன்தான் ஆனாலும் சான்றோர்கள்
அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்

– முடியரசன்

### பொருளுரை

நானிலம் – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்கள். தமிழன் கற்களும் முற்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பான காட்டுப்பகுதியைப் பண்படுத்தி மக்கள் வாழ்வதற்கு ஏற்ற நிலமாகச் சீராக்கினான். தனது உடல் வலிமையால் வளங்களைப் பெருக்கினான். பிறகு, மக்கள் சமுதாயம் வாழ்வதற்கான ஊர்களாகவும் நகரங்களாகவும், நாடாகவும் உருவாக்கிப் பெருமை பெற்றனர் தமிழர்.

பிறகு நிலத்தின் தன்மையை அறிந்து நால்வகை நிலங்களாக வகைப்படுத்தினான். அவை, மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலம், காடும் காடு சார்ந்த முல்லை நிலம், வயலும் வயல் சார்ந்த மருத நிலம், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலம் ஆகும். இவ்வாறு நால்வகை நிலங்களை வகைப்படுத்திய நாகரிக மனிதன் என்ற பெருமையும் பெற்றான்.

பழந்தமிழர் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தனர். அச்சத்தைத் தரும் போர்க்களங்களிலும் எளிதாக வெற்றி பெற்றான். சேரமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் வெற்றிக்கொடியைப் பனி சூழ்ந்த இமயமலையில் நாட்டினான்.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0


பழந்தமிழர் ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தனர். ஏலம், மிளகு போன்றவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தனர். கப்பலில் உலகையே வலம் வந்தனர். பழந்தமிழர் எதற்கும் அஞ்சாதவர்கள். ஆனால், கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய சான்றோர்கள் செய்வதற்கு அஞ்சும் தீய செயல்களைச் செய்ய அஞ்சி அவற்றை விலக்கிவிடுவர் என்று முடியரசன் கூறுகிறார்.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ....................** ※

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம்
இ) வீரம் ஈ) அழுகை [விடை: இ) வீரம்]

**2. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............**

அ) கல் + அடுத்து ஆ) கல் + எடுத்து
இ) கல் + லடுத்து ஈ) கல் + லெடுத்து [விடை: ஆ) கல் + எடுத்து]

**3. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.....**

அ) நா + னிலம் ஆ) நான்கு + நிலம்
இ) நா + நிலம் ஈ) நான் + நிலம் [விடை: ஆ) நான்கு+ நிலம்]

**4. நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................**

அ) நாடென்ற ஆ) நாடன்ற
இ) நாடிஎன்ற ஈ) நாடுஅன்ற [விடை: அ) நாடென்ற]

**5. கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) கலம்ஏறி ஆ) கலமறி
இ) கலன்ஏறி ஈ) கலமேறி [விடை: ஈ) கலமேறி]

### சொற்றொடரில் அமைத்து எழுதுக

அ) மாநிலம் – என் நண்பன் ஓட்டப்பந்தயத்தில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளான்.

ஆ) கடல் – கடல் பரந்து விரிந்துள்ளதால் அதற்குப் பரவை என்று பெயர்.

இ) பண்டங்கள் – தின்பண்டங்களை வீணாக்கக்கூடாது.

### நயம் அறிக

**1. நானிலம் படைத்தவன் பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**எதுகை :**

கல்லெடுத்து – மல்லெடுத்த
ஊராக்கி – பேராக்கி
மாநிலத்தில் – நானிலத்தை

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

ஆழ - சூழும்
முக்குளித்தான் - எக்களிப்பு
பண்டங்கள் - கண்டங்கள்
அஞ்சானம் - அஞ்சுவதை

2. **நானிலம் படைத்தவன் பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**மோனை :**

அஞ்சாமை - அஞ்சுவதை

## குறுவினா

1. **நான்கு நிலங்கள் என்பன யாவை?** ※

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவை நான்கு நிலங்கள் ஆகும்.

2. **தமிழன் எதற்கு அஞ்சினான்?**

தமிழன், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

3. **தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?**

ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள் தோறும் அனுப்பி வணிகம் செய்வதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்.

## சிறுவினா

1. **தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?**

**தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை உருவாக்கின விதம் :**

(i) தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்.
(ii) தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான்.
(iii) ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான்.
(iv) முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினான். இதனால் நாகரிக மனிதன் ஆனான்.

2. **தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?**

**தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன :**

(i) பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான். அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான்.
(ii) பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக்கொடியை நாட்டினான். ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான்.
(iii) ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள் தோறும் அனுப்பி வணிகம் செய்தான். கப்பலில் உலகை வலம் வந்தான்.
(iv) தமிழன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுவான்.

## சிந்தனை வினா

**1. காடுகளில் வாழ்ந்த மனிதன் எவ்வாறு படிப்படியாக நாகரிகம் அடைந்திருப்பான் எனச் சிந்தித்து எழுதுக.**

**நாகரிக வளர்ச்சி :**

மனிதன் காடுகளில் தோன்றினான். கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். அவர்களுடைய பசியைப் போக்க காட்டு விலங்குகளை வேட்டையாடினான். அவற்றைச் சுட்டுத் தின்பதற்காக நெருப்பைக் கண்டறிந்தான். சிக்கிமுக்கிக் கல்லை அதற்குப் பயன்படுத்தினான். தேவதாரு மற்றும் மூங்கில் மரத்தைக் கொண்டு நெருப்பு மூட்டக் கற்றுக் கொண்டு உணவுப் பொருட்களைச் சுட்டுத் தின்றான். பிறகு கல், வெண்கலம், இரும்பு என வகை வகையான கருவிகளைக் கண்டறிந்தான். விவசாயத்திற்கு அக்கருவிகளைப் பயன்படுத்தினான். இரை கிடைக்கும் இடத்தைத் தேடி இடம் விட்டு இடம் பெயர்ந்தான். ஓரிடத்தில் வீடு கட்டி வாழ்ந்து விவசாயத்தின் மூலம் உணவு பெறுவது தொடங்கி ஆடு, மாடுகளைப் பழக்கி உழவுத் தொழில் செய்தான். மட்பாண்டங்கள் செய்யக் கற்றுக் கொண்டான். படகுகள் செய்து ஆறு, கடல் ஆகிய நீர்நிலைகளில் பயணித்தான். பருத்தி, ஆட்டு மயிர்கள் கொண்டு ஆடை உருவாக்கினான். இவ்வாறு அவனுக்குத் தேவையான அனைத்தையும் அவனே உருவாக்கினான். சிறு சிறு குடியிருப்புகள் உருவாயின.

இது ஒரு கிராமம் தோன்றுவதற்குத் தொடக்கமாக அமைந்தது. இச்சிறு கிராமங்கள் படிப்படியாக நகரங்களாக வளர்ச்சி பெற்றன. நகரங்கள் வந்தபிறகு நாகரிகம் வந்தது. தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள மொழி பயன்பட்டது.

இவ்வாறு வளர்ந்த மனிதன் அறிவியல் வளர்ச்சியின் மூலம் பல வகையில் முன்னேறினான். புதிய புதிய இயந்திரங்கள் மக்களின் வேலைச் சுமையைக் குறைத்து நேரத்தை மிச்சப்படுத்தியது. மனிதன் ஓய்வு பெறக் கற்றுக் கொண்டான். இவ்வாறு மனிதன் படிப்படியாக வளர்ந்தான்.

## கற்பவை கற்றபின்

**குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலுக்கு உரிய நிலங்களை அறிந்து எழுதுக.**

(i) குறிஞ்சி – மலையும் மலையைச் சார்ந்த இடங்கள்.
(ii) முல்லை – காடும் காடு சார்ந்த இடங்கள்.
(iii) மருதம் – வயலும் வயல் சார்ந்த இடங்கள்.
(iv) நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடங்கள்

## கூடுதல் வினாக்கள்

**பொருள் எழுதுக**

மல்லெடுத்த – வலிமை பெற்ற
நல்கும் – தரும்
மறம் – வீரம்
எக்களிப்பு – பெருமகிழ்ச்சி

இரண்டாம் பருவம்

# அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(3 × 1 = 3)**

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ....................

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

2. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மூச்சு + அடக்கி ஆ) மூச் + அடக்கி

இ) மூச் + சடக்கி ஈ) மூச்சை + அடக்கி

3. கிடைக்கும் பொருள்களின் ............க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம்.

அ) அளவை ஆ) மதிப்பை

இ) எண்ணிக்கையை ஈ) எடையை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **(3 × 1 = 3)**

4. மலையும் மலையைச் சார்ந்த இடங்கள் .............. .

5. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்.........

6. நீர் .................. தேங்கி இருக்கிறது? (அது/எங்கே)

**III. பொருத்துக.** **(4 × ½ = 2)**

7. விடிவெள்ளி - பஞ்சுமெத்தை

8. மணல் - ஊஞ்சல்

9. புயல் - போர்வை

10. பனிமூட்டம் - விளக்கு

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** **(2 × ½ = 1)**

11. மாநிலம் -

12. கடல் -

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** **(3 × 2 = 6)**

13. நான்கு நிலங்கள் என்பன யாவை?

14. கடல் பாடலில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடப்படுவன யாவை?

15. சிறுவணிகப் பொருட்கள் யாவை?

16. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** **(2 × 3 = 6)**

17. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?

18. 'கடல்' பாடலின் பொருளை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

19. அகச்சுட்டு, அகவினா என்று பெயரிட்ட காரணத்தை எழுதுக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** **(4)**


20. 'கடலோடு விளையாடு' பாடலைச் செய்யுள் வடிவில் நான்கு வரிகள் எழுதுக.

☆☆☆

www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in
https://t.me/suraguides https://bit.ly/3pspUm0





# இயல் 1 புதுமைகள் செய்யும் தேசமி

கவிதைப்பேழை

## பாரதம் அன்றைய நாற்றங்கால்



### நூற் குறிப்பு

தாராபாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன். கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர். புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல் நுனி வெளிச்சங்கள் முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும். இப்பாடல் தாராபாரதியின் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### பாடல்

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!

தெய்வ வள்ளுவன் நெய்த குறள்தான்
தேசம் உடுத்திய நூலாடை!
மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு
மெய்யுணர்வு என்கிற மேலாடை! (புதுமைகள்)

காளி தாசனின் தேனிசைப் பாடல்கள்
காவிரிக் கரையில் எதிரொலிக்க
கம்பனின் அமுதக் கவிதை களுக்குக்
கங்கை அலைகள் இசையமைக்க (புதுமைகள்)

கன்னிக் குமரியின் கூந்தலுக்காகக்
காஷ்மீர்த் தோட்டம் பூத்தொடுக்கும்!
மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்

கிழக்குக் கரையின் நலம்கேட்கும்! (புதுமைகள்)
*புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்! (புதுமைகள்)
அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!*

– தாராபாரதி



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

### சொல்லும் பொருளும்

1. மெய் – உண்மை
2. தேசம் – நாடு

### பொருளுரை

பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்தியநாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ஆடையாக விளங்குகின்றது. உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன. குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னை பாரத நாடு திகழ்கின்றது. நம் நாடு பிறநாட்டு மக்களின் பசியையும் போக்கி வருகின்றது. அறத்தின் ஊன்றுகோலாகக் காந்தியடிகளின் அகிம்சை என்னும் சிறிய கைத்தடி விளங்குகின்றது.

### விளக்கவுரை

புதுமையான பல செயல்களைச் செய்த நாடு நம் பாரதநாடு. உலகின் கிழக்குத் திசையின் வாசலாகவும் திகழ்கிறது. திருவள்ளுவர் இயற்றிய உலகப்பொதுமறையான திருக்குறள் நம் பாரததேசம் அணிந்திருக்கும் நூலாடையாக விளங்குகின்றது. உண்மையைப் போற்றிய பாரதத்தாய்க்கு தத்துவஞானம் எனப்படும் மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகிறது. காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரையில் எதிரொலிக்கின்றது. அமிர்தம் போன்ற கம்பனின் கவிதைகளுக்கு, கங்கையாற்றின் அலைகள் இசையமைக்கின்றன. பாரததேசத்தின் தென்முனையான குமரிமுனையாகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீர்த் தோட்டங்களில் பூக்கும் மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன. மேற்குத் திசையில் தோன்றும் நதிகள் பாரதநாட்டின் கிழக்குத் திசையின் எல்லை வரை பாய்ந்து நன்மையை விளைவிக்கின்றன. புல்வெளிகளெல்லாம் பூக்கள் நிறைந்த பூஞ்சோலைகளாக மாறிப் பொற்காலமாகப் புன்னகை புரிகின்றன. கற்களைச் செதுக்கி சிற்பங்களாக மாற்றிக் காவியக் கலைக்கூடங்களாக மாற்றிய தேசமாகத் திகழ்கிறது நம் பாரதநாடு. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியைப் போன்று அனைத்துச் செல்வங்களையும் அள்ளித் தரும் தேசமாக நம் பாரத தேசம் விளங்குகிறது. பிற நாட்டு மக்களின் பசியையும் அதாவது அவர்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் அளவிற்கு வளங்களைப் பெற்றுள்ளோம். காந்தியடிகளின் அறவழிப்பாதையான அகிம்சை என்னும் சிறிய கைத்தடி அறத்தின் ஊன்றுகோலாகத் திகழ்கிறது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்**

அ) திருவாசகம் ஆ) திருக்குறள்
இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை [விடை: ஆ) திருக்குறள்]

**2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்**

அ) காவிரிக்கரை ஆ) வைகைக்கரை

இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை [விடை: அ) காவிரிக்கரை]

**3. கலைக்கூடமாகக் காட்சி தருவது**

அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம்

இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம் [விடை: அ) சிற்பக்கூடம்]

**4. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை

இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆடை

[விடை: அ) நூல் + ஆடை]

**5. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க

இ) எதிரொலிக்க ஈ) எதிர்ரொலிக்க [விடை: இ) எதிரொலிக்க]

## நயம் அறிக

**1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**எதுகை :**

| | | |
|---|---|---|
| தெய்வ வள்ளுவன் | மெய்களை | மெய்யுணர்வு |
| புல்வெளி | கல்லை | |
| அன்னை | அன்னிய | |

**2. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக**

**மோனை :**

| | | | | |
|---|---|---|---|---|
| புதுமைகள் | பூமியின் | தெய்வ வள்ளுவன் | தேசம் | |
| மெய்களை | மெய்யுணர்வு | காளிதாசன் | காவிரி | |
| கம்பனின் | கங்கை | கன்னி | காஷ்மீர் | கிழக்கு |
| புல்வெளி | புன்னகை | கல்லை | கட்டி | |
| அன்னை | அன்னிய | அண்ணல் | அறத்தின் | |

**3. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

**இயைபு :**

| | | | |
|---|---|---|---|
| தேசமிது | வாசலிது | நூலாடை | மேலாடை |
| எதிரொலிக்க | இசையமைக்க | பூத்தொடுக்கும் | நலம் கேட்கும் |
| பொற்காலம் | கலைக்கூடம் | பூக்காடாகி | காவியமாக்கி |

மூன்றாம் பருவம்

## குறுவினா

1. **தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்கள் :**

(i) திருவள்ளுவர் (ii) காளிதாசர் (iii) கம்பர்.

2. **இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.**

இந்தியாவின் மேற்குத் திசையில் தோன்றுகின்ற நதிகள் அனைத்தும் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

## சிந்தனைவினா

1. **நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

**நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை :**

(i) இன்றைய மாணவர்கள் நாளைய இந்தியாவின் மன்னர்கள் என்றும் நாட்டைத் தாங்கும் தூண்கள் என்றும் கூறிக் கொண்டே இருந்தால் மட்டும் போதுமா? போதாது. அதனை மெய்ப்படுத்த மாணவ சமுதாயம் முன்வர வேண்டும்.

(ii) ஆம். இந்தியாவின் வளர்ச்சியே மாணவர்களின் கையில்தான் உள்ளது. மாண்+ அவன் = மாணவன். மாண் என்றால் பெருமை. அதனால்தான் மாண்+அவர்கள் என்று இந்தப் பருவத்தினரை ஊக்கப்படுத்தி வருகின்றனர். மாணவர்களின் ஊக்கத்தில் வருங்கால இந்தியாவின் வளமை அடங்கி இருக்கிறது.

(iii) மண்ணைக் குழைத்தால்தான் நாம் விரும்பிய வண்ணம் மட்பாண்டங்கள் செய்யவியலும். கல்லை உளியால் செதுக்கினால்தான் அழகான சிலை உருவாகும். அவற்றை போல மாணவர்களைச் செம்மைப்படுத்தினால்தான் நம் நாடு வளரும்.

(iv) பூகோளப் பாடத்தில் இந்திய வரைபடம் வரையும் போது எந்த மாநிலங்களில் எந்தெந்த நதிகள் பாய்கின்றன? அவற்றிலிருந்து பிரியும் கிளை நதிகள் யாவை? அவற்றால் பயனடையும் நிலப்பரப்பு அளவு யாது? நம் நாட்டில் விளையும் பயிர்கள் யாவை? போன்ற விவரங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும். மாணவப் பருவத்தில் இவற்றையெல்லாம் அறிந்தால்தான் எதிர்காலத்தில் நாட்டைப் பற்றிய விழிப்புணர்வு அவனிடத்தில் தோன்றும்.

(v) ஒவ்வொரு மாணவனும், படித்த இளைஞனும் தங்களுடைய ஓய்வு நேரத்தில் முதலில் தன்னுடைய குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பாடுபட வேண்டும். நாட்டை நல்வழிப்படுத்தவும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தவும் மாணவர்களின் மகத்தான பொறுப்பே முதலிடத்தில் உள்ளது.

(vi) படித்துவிட்டோம், வேலைக்குப் போகிறோம், வருவாயைப் பெற்றோரிடம் கொடுத்தோம் என்று இல்லாமல் பெற்றோருக்கு உதவுதல், வீட்டு வேலைகளைச் செய்தல், கிராமப்புற இளைஞர்கள் காலை, மாலை வேளைகளில் வயலுக்குச் சென்று தந்தைக்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யலாம். ஒவ்வொரு மாணவனும் இதைக் கடைப்பிடித்தால் நாடு கண்டிப்பாக முன்னேறும்.

(vii) மனிதநேயம் வளர மாணவர்கள் பாடுபடுதல் அவசியம். சமூகத் தொண்டுகளில் பெயருக்காகவும், புகழுக்காகவும் இல்லாமல் ஆர்வத்துடனும் முழு ஈடுபாட்டுடனும் செயல்பட வேண்டும். ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வதில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை இசையோடு பாடுக.**

பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை **மாணவர்கள் தாங்களாகவே** இசையோடு பாடி மகிழ்ந்திடுங்கள்.

**2. நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு என்னும் தலைப்பில் பேசுக.**

(i) இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள் என்பது போல இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாய்த் திகழ்வது நம்மைப் போன்ற மாணவர்கள்தாம். நாம் நமது சக்தியை நல்வழியில் பயன்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும். நாம் பெற்றோர் கூறுவதனையும், ஆசிரியர் கூறுவதனையும் கேட்டு செயலாற்ற வேண்டும்.

(ii) நம்மைப் போன்ற மாணவர்கள் முயன்றால் எதிர்கால வரலாற்றையே சிறப்பாக மாற்றலாம். மாணவர்கள் இளம்வயதிலேயே பொதுத்தொண்டு செய்வதைப் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகவே பள்ளிகளில் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி இயக்கம் ஆகிய இயக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகளில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தொண்டு பதிலுதவி பாராத் தொண்டாக இருக்க வேண்டும்.

(iii) பொதுத்தொண்டு செய்ய முனையும் மாணவர்கள் தன்னலமற்றவராக இருத்தல் வேண்டும். ஆடம்பர வாழ்க்கையை எதிர்ப்பவராகவும் இருக்க வேண்டும். அடக்கத்துடன் இருக்க வேண்டும். ஏமாற்றம் ஏற்பட்டால் சகித்துக் கொள்பவராய் இருக்க வேண்டும். அளவற்ற பொறுமையுடனும், கீழ்ப்படியும் பண்புடனும் இருத்தல் அவசியம் ஆகும்.

(iv) அப்துல்கலாம் கூறியதைப் போல் 'வானம்தான் எல்லை, நான் பறந்து கொண்டே இருப்பேன்' என்பதைப் போல் நம்முடைய வாழ்வில் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மையை நீக்கி திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(v) ஆபத்துக் காலங்களில் மட்டும்தான் உதவி செய்ய வேண்டும் என்று இருக்கக்கூடாது. எந்நிலையிலும் பிறர் துயர் களைய நாம் உதவ வேண்டும். சாலை விபத்துகளில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்புதல், அவருடைய உறவினர்க்குத் தகவல் அனுப்புதல், தீ விபத்து ஏற்பட்டால தீயணைப்பு வீரர்களின் ஆலோசனைப்படி பாதிக்கப்பட்டவர்க்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யலாம்.

(vi) சுத்தமான குடிநீர், நல்ல உணவு போன்றவை ஏழை, எளியவர்களுக்குக் கிடைக்கும் வகையில் செயல்படும் எண்ணம் மாணவர்களுக்கு இருக்க வேண்டும். சுகாதாரமற்ற பகுதிகளில் வாழும் மக்களுக்குக் கொசுக்கள் மூலம் பரவும் நோய்கள் குறித்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கான அவசியத்தைத் தெளிவுப்படுத்த வேண்டும். டெங்கு, பன்றிக்காய்ச்சல் போன்ற காய்ச்சல்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

(vii) குளம், குட்டைகளை ஆழப்படுத்துதல், மரங்களை வெட்டாமல் பாதுகாத்தல், புதியதாக மரக்கன்றுகள் நடுதல், அனைத்து இல்லங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளைக் கட்டுதல், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் போன்றவை தற்காலத்தேவையாக உள்ளன. இவற்றை மாணவர்கள் நல்ல முறையில் செய்ய வேண்டும்.

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

விரிவானம்

# வேலுநாச்சியார்



## மதிப்பீடு

**1. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.**

**வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வு**

**முன்னுரை :**

வேலுநாச்சியார் இராமநாதபுரத்தை ஆண்ட செல்லமுத்து மன்னரின் ஒரே மகள். வேலுநாச்சியார் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளைக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றைக் கற்றுக்கொண்டார். அவர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்துகொண்டார்.

**முத்துவடுகநாதர் மரணம் :**

காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

**ஆலோசனைக் கூட்டம் :**

திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் வேலுநாச்சியார், அமைச்சர் தாண்டவராயன், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர். சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டதால், எப்படியாவது சிவகங்கையை மீட்க வேண்டும் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஐதர்அலி அனுப்பிய ஐயாயிரம் படை வீரர்கள் வந்தனர். அடுத்தநாள் சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் எனத் திட்டமிட்டனர்.

**போர்த்திட்டம் :**

முத்துவடுகநாதர் காளையார் கோவிலில் கொல்லப்பட்டதால் முதலில் காளையார் கோவிலைக் கைப்பற்றிய பிறகு சிவகங்கையை மீட்கவும் திட்டமிட்டனர். அதன்படி ஆண்கள் படைப்பிரிவுக்கு மருதுசகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

**காளையார் கோவிலைக் கைப்பற்றுதல் :**

திட்டமிட்டபடி காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே நடைபெற்ற கடுமையான போரின் இறுதியில் ஆங்கிலேயரின் படையை தோற்கடித்து காளையார் கோவிலை வேலுநாச்சியார் கைப்பற்றினார்.

**வேலுநாச்சியாரின் திட்டம் :**

காளையார் கோவிலைக் கைப்பற்றியதும், உடனே சிவகங்கையைத் தாக்கலாம் என்று பெரிய மருது கூறினார். அதற்கு வேலுநாச்சியார் "அவசரம் வேண்டாம், இப்போது சிவகங்கை கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விஜயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது உள்ளே நுழையலாம்" என்றார். "விஜயதசமி நாளில் பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களை மறைத்துச் செல்லட்டும். அவர்கள் உள்ளே தாக்குதலைத் தொடங்கியதும் ஆண்கள் பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கி ஆங்கிலேயரை விரட்டிவிடலாம்" என்றார்.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0

கற்கண்டு

# நால்வகைச் சொற்கள்

## மதிப்பீடு

**சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அ) படித்தாள் | ஆ) ஐ | இ) மற்று | ஈ) கு |
| 2. | அ) மதுரை | ஆ) கால் | இ) சித்திரை | ஈ) ஓடினான் |
| 3. | அ) சென்றாள் | ஆ) வந்த | இ) சித்திரை | ஈ) நடந்து |
| 4. | அ) மா | ஆ) ஐ | இ) உம் | ஈ) மற்று |

**விடை:**

1. அ) படித்தாள் 2. ஈ) ஓடினான்

3. இ) சித்திரை 4. அ) மாநாடு

## குறுவினாக்கள்

**1. சொல் என்றால் என்ன?**

ஒரு எழுத்து தனித்து நின்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தோ பொருள் தருபவை சொல் எனப்படும். **எ.கா.** பூ, கடல்

**2. சொற்களின் வகைகளை எழுதுக.**

சொற்களின் வகைகள் நான்கு. அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

**3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?**

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொற்களை இடைச்சொல் என்கிறோம். இது தனித்து இயங்காது. **எ.கா.** தம்பிக்கு – கு ; திருக்குறளை – ஐ

## கற்பவை கற்றபின்

**1. பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக.**

**1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.**

**விடை:** வளவன், பேருந்து – பெயர்ச்சொல்

**2. நாள்தோறும் திருக்குறளைப் படி.**

**விடை:** திருக்குறள் – பெயர்ச்சொல்

**3. ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது என்றார் ஆசிரியர்.**

**விடை:** படி – வினைச்சொல், சாலச்சிறந்தது – உரிச்சொல்.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக.**

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

**விடை:** தீண்டல், இன்பம் – இடைச்சொல்

**2. செய்தித்தாளில் விளையாட்டுச் செய்தி ஒன்றைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.**

இந்தியா-இலங்கை இடையிலான உலக கோப்பை இறுதி ஆட்டத்தில் யுவராஜ்சிங்கிற்கு முன்பாக இறங்கி 91 ரன்கள் அடித்து இந்தியாவை வெற்றி பெற செய்த தோனியின் செயல் சாலச் சிறந்த ஆட்டம் என கிரிக்கெட் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

**விடை:**

1. இந்தியா, இலங்கை, யுவராஜ் சிங், தோனி – பெயர்ச்சொல்
2. அடித்தது, செயல் – வினைச்சொல்
3. இடையிலான – இடைச்சொல்
4. சாலச் சிறந்த – உரிச்சொல்

## மொழியை ஆள்வோம்

**கேட்க :**

**1. தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரின் வரலாற்றைக் கேட்க.**

**'மறை. திருநாவுக்கரசு' அவர்களின் வாழ்க்கை வரலாறு :**

(i) மறை. திருநாவுக்கரசு தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் மகன் ஆவார். இவர் தம் தந்தையின் விருப்பப்படியும், எண்ணப்படியும் திருவையாற்றில் தமிழ்க் கல்லூரியில் படித்து புலவர் பட்டம் பெற்றார்.

(ii) சென்னை நுங்கம்பாக்கம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியிலும், திருநெல்வேலியில் குலசேகரன் பட்டினம் திருவள்ளுவர் அரசு உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் 1952 முதல் 1967 வரை தமிழ் விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். 1967இல் பணி ஓய்வு பெற்றார்.

(iii) 1937-ல் இந்திமொழி கட்டாயமாக்கப்பட்டது. அதனை எதிர்த்து தமிழகத்தில் பெரும் போராட்டம் ஏற்பட்டது. அதில் கலந்து கொண்டு 1938இல் சிறைப்பட்டார். பெரியார், அண்ணாதுரை ஆகியோருடன் சிறையில் இருந்தவர். இவருடைய மனைவி ஞானம்மாள் தம் ஐந்து வயது குழந்தையுடன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

(iv) மறை. திருநாவுக்கரசு ஒரு காந்தியவாதி. காந்தியடிகள் தொடங்கிய அறப்போராட்டத்தில் அரசை எதிர்த்து மேடைகளில் பேசினார். திரு.வி.க.வுடன் தமிழகம் முழுக்கப் பயணம் செய்து இந்திய விடுதலைக்காக உரிமைக்குரல் கொடுத்தார். 1941 சனவரி முப்பது முதல் ஓராண்டு சிறையில் இருந்தார்.

(v) சிவநெறி, நாயன்மார்களின் வரலாறு பற்றி சொற்பொழிவுகள் செய்துள்ளார். யாழ்ப்பாணம், கொழும்பு, மலேசியா, பர்மா ஆகிய நாடுகளுக்குச் சென்று சமயச் சொற்பொழிவாற்றி உள்ளார். சேக்கிழார் திருப்பணிக் கழகத்தைத் தொடங்கியவர்.

(vi) மறைமலையடிகள் வரலாறு, நீலாம்பிகை வரலாறு பெரியபுராண ஆய்வுரை போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.

(vii) விடுதலை பெறுவதற்காக அவர் கண்ட புதுவழி அறவழி. 'கத்தியின்றி இரத்தமின்றி' புதிய அகிம்சை வழியில் போராடினார். ஒத்துழையாமை இயக்கம், தண்டி யாத்திரை, வெள்ளையனே வெளியேறு இயக்கம், தனியாள் அறப்போராட்டம் எனப் பல வழிகளில் விடுதலைக்குப் போராடி விடுதலை பெற்றுத் தந்தார்.

(viii) அறவழி (அகிம்சை) என்றால் காந்தியடிகளே நம் நினைவிற்கு வருவார். அப்படிப்பட்ட ஒரு தலைவர் நாதுராம் கோட்சே என்ற கொடியவனால் 1948, சனவரி 30ஆம் நாள் கொல்லப்பட்டார்.

### 3. வேலுநாச்சியார்

(i) ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி வேலு நாச்சியார்.

(ii) இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து. சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி. 1730ஆம் ஆண்டு ஒரே பெண் மகளாகத் தோன்றியவர்தான் வேலுநாச்சியார். இவர் ஆண்களைப் போல வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி முதல் அனைத்துப் பயிற்சியையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் சிவகங்கையை ஆண்ட மன்னரான முத்துவடுகநாதரை மணந்து கொண்டார்.

(iii) ஆங்கிலேயர் 1772ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீர மரணமடைந்தார். வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர்அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.

(iv) மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். ஒரு விஜயதசமி நாளில் இப்போர் நடந்தது. அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்.

**1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியர் யார்?**

சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியர் வ.உ.சிதம்பரனார்.

**2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?**

வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

**3. வ.உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?**

வ.உ.சி. பாரதியாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்.

**4. வ.உ.சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை?**

**வ.உ.சி. அவர்களின் பன்முகத்தன்மை :**
வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர்.

**5. வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?**

**வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் :** தமிழ், ஆங்கிலம்.

www.Padasalai.Net
https://t.me/suraguides
www.CBSEtips.in
https://bit.ly/3pspUm0


## இடம் அறிந்து பயன்படுத்துவோம்

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் 'ஓர்' என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் 'ஒரு' என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) ஓர் ஊர் ஓர் ஏரி
ஒரு நகரம் ஒரு கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் 'அது' என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) அஃது இங்கே உள்ளது
அது நன்றாக உள்ளது

## கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

1. **ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.**

ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.

2. **ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.**

ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்.

3. **அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.**

அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

4. **அ:்து நகரத்திற்குச் செல்லும் சாலை.**

அது நகரத்திற்குச் செல்லும் சாலை.

5. **அது ஒரு இனிய பாடல்.**

அஃது ஓர் இனிய பாடல்.

## அகரவரிசைப்படுத்துக

**பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு.**

(i) பழங்கள் (ii) பாரதம் (iii) பின்னிரவு (iv) பீலி
(v) புதுமை (vi) பூமி (vii) பெண்கள் (viii) பேருந்து
(ix) பையன் (x) பொதுக்கூட்டம் (xi) போக்குவரத்து

## செயல் திட்டம்

**காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை

## கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

### தேசிய ஒருமைப்பாடு

**முன்னுரை :**

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும்.

www.Padasalai.Net
enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## அலகு தேர்வு

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்
அ) காவிரிக்கரை ஆ) வைகைக்கரை
இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை

2. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

3. கலைக்கூடமாகக் காட்சி தருவது
அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம்
இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. பூமியின் கிழக்கு வாசலாகத் திகழ்வது ..............................

5. ரௌலட் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு..............................

6. சென்னையில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டிற்கு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர் ..............................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. இலக்கிய மாநாடு - பாரதியார்
8. தமிழ்நாட்டுக் கவிஞர் - சென்னை
9. குற்றாலம் - ஜி.யு.போப்
10. தமிழ்க் கையேடு - அருவி

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. மாற்றம் -
12. ஆடம்பரம் -

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.
14. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக?
15. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?
16. சொல் என்றால் என்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.
18. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. சொற்களின் வகைகளை எழுதுக.

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

20. 'பாரதம் அன்றைய நாற்றங்கால்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

மூன்றாம் பருவம்

www.surabooks.com www.Padasalai.Net